விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 06 புதன்கிழமை (19.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி
சிங்காரம் எழுதும்
ஏவிளம்பி வருட
இராசி பலன்
உள்ளே...

## கடல்நீரை நன்னீராக்கும்
# மருதங்கேணி திட்டத்துக்கு அனுமதி வழங்க முடியாது!
### யாழின் குடிநீருக்கு மாற்றுவழி தேடுங்கள் - சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, மருதங்கேணி கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்த த.தே.கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், யாழ். குடாநாட்டு மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் மாற்றுவழியை கண்டறியுங்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மருதங்கேணி கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பில் ஆய்வாளர்களால் விளக்கமளிக்கும் நிகழ்வு யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேத

23ஆம் பக்கம் பார்க்க....

## விஜய் மல்லையா லண்டனில் கைது



(லண்டன்)

இந்திய வங்கிகளில் கோடிக் கணக்கில் கடன் பெற்று அதை

24ஆம் பக்கம் பார்க்க....

### சிறுநீரக நோய்
## 26,000 பேர் பாதிப்படைவு!

(கொழும்பு)

2016ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, இலங்கையில்

24ஆம் பக்கம் பார்க்க....

## மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாசையூர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது நெஞ்சுவலி ஏற்பட்டதன் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

பாசையூரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை வின்சன் சியஸ்

24ஆம் பக்கம் பார்க்க....

## கிராம சேவகர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொடிகாமம் அல்லாரை ஜே/322 கிராம சேவையாளர் ஒருவர் மதுபோதைக கும்பலால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பண்டாரவன்னியன் உருவச்சிலை திறப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் அமைக்கப்பட்ட வன்னி மண்ணை இறுதியாக அரசாண்ட தமிழ் மன்னான மாவீரன் குல சேகரம் வைரமுத்து - பண்டார

04ஆம் பக்கம் பார்க்க....

### தமிழக அரசியல்
## தினகரனை ஒதுக்க முடிவு

(சென்னை)

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராகவுள்ள தினகரனையும் அவர் சார்ந்த சசிகலா குடும்பத்தையும் முழுமையாக ஒதுக்கி வைக்கிறோம். தினகரன் குடும்பத்தின் தலையீடு கட்சியிலும், ஆட்சி

24ஆம் பக்கம் பார்க்க....

## கைக்குண்டுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

உள்நாட்டு தயாரிப்பு கைக்குண்டுடன் அல்வாய் பகுதியில் இளைஞன் ஒருவரை பருத்தித்துறை

23ஆம் பக்கம் பார்க்க....

## சிகிச்சை வழங்காமையால் மாற்றுத்திறனாளி மரணம்
### விசாரணை அறிக்கை நீதிமன்றுக்கு

(கரணவாய்)

சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளியாக உள்ள ஆண் ஒருவருக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப் படாமையால் அவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மணற்காடு குடத்தனையைச் சேர்ந்த மருசலின் யோன்சன் ஹெனடிற் (வயது-44) என்ற மாற்றுத்திறனாளியான நபர் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 11.00 மணியளவில் உடல் நலக்குறைவு காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில்மறுநாள் காலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்மரணம் தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றின் கட்டளைக்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆறுமுகம் திட்டம் குறித்து மத்திய அரசுக்கு பதில்
### வடக்கு அபிவிருத்தி கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கான ஆறுமுகம் திட்டம் தொடர்பில் சாத்திய கூறுகளை ஆராய்ந்த பின்னர் மத்திய அரசுக்கு பதில் வழங்குவது என நேற்றைய தினம் நடைபெற்ற வடக்கு மாகாண அபிவிருத்தி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் திட்டங்களை முழுமையாக நிராகரிக்காமல் அந்த திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு வடக்கு மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் திட்டங்களை மாற்றியமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.கொட்டடிப் பகுதியில் இளைஞன் மர்மமாக மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியில் இளைஞரொருவர் மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்.ஐந்து சந்தி பச்சபள்ளி பகுதியை சேர்ந்த யாஸீன் அஸ்வத் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை கொட்டடி ஏழாம் குறுக்கு வீதியில் சடலமொன்று இருப்பதை அப்பகுதி மக்கள் அவதானித்திருந்தனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## இயேசு கிறிஸ்துநாதரை ஒப்பிட்டுப் பேசவில்லை
### முதலமைச்சர் தன்னிலை விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும் சுவாமி பிரேமானந்தரின் வாழ்க்கையையும் எவ்விதத்திலும் தான் ஒப்பிட்டுப் பேசவில்லை எனத் தெரிவித்துள்ள வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இவ்விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துக்களில் அரசியல் கலந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாண முதலமைச்சரால்

23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் - சிங்கள மீனவர்கள் கொக்கிளாயில் முறுகல்நிலை



23ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்டோ தீக்கிரை



(கரணவாய்)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நேற்றிரவு முச்சக்கர

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

"கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்: உன் துக்க நாட்கள் முடிந்து போம்." (ஏசாயா 60:20)
தேவன் உங்களுக்காக ஆயத்தம் செய்தவைகளை வந்து பாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

# இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷப் பிரசங்கங்களும்

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி வியாழக்கிழமை மாலை முதல் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை
இளையதம்பி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபைச்சாலையில்
தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.
**ஏனைய கூட்டங்கள்:** (வெள்ளி முதல் ஞாயிறு வரை)
காலை 7.00 மணிக்கு வேதபாடம், காலை 9.00 மணிக்கு காலை ஆராதனை, மாலை 2.30 மணிக்கு காத்திருப்புக்கூட்டம்.
''உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்'' (யோவான் 16:20)
பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லி சூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம் சந்தோஷம், பாவ மன்னிப்பு தருகிறார்.

விபரங்களுக்கு: **இலங்கை பெந்தெகொஸ்தே சபை,**
**111, கண்டி வீதி, சுண்டிக்குளி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 222 2339**

*இலவச உட்பிரவேசம்
*யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
*வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்
(8763)



WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நாணல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-8141)


## வியட்நாம் கம்யூனிட்ஸுகளுக்கு பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

வியட்நாம் கம்யூனிட்ஸ் கட்சியின் பிரதிநிதிகளுக்கு இலங்கைக்கு வருகை தருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வியட்நாம் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வியட்நாம் கம்யூனிட்ஸ் கட்சியின் பொதுச்செயலாளர் குயென் புடரோங்கை கட்சியின் தலைமையகத்தில் வைத்து சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்துள்ளார். (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# பனை அபிவிருத்திச் சபை
# PALMYRAH DEVELOPMENT BOARD

## VACANCY ANNOUNCEMENT

Applications are invited from citizens of the Democratic Socialist Republic of Sri Lanka for the following posts of Palmyrah Development Board.

**01.Employee Category: Research Assistant**

**Qualifications :**

A Bachelor's Degree in Agriculture,which is recognized by the U.G.C. with a Post Graduate Diploma in the relevant field.Specially Agronomy is preferable.

**Salary Scale relevant to the post:**
MA 5-1-2016 Rs. (34,870 – 10 X 660 – 15 X 755 – 4 X 495 – 11 X 930 – 63,025/=) as per the Management Circular 02/2016. Salary step specified for as at 01.01.2017 of the salary scale: Rs. 24,082/= and government approved allowances.

**02.Employee Categories: Technical Assistant**
**Laboratory Assistant**
**Management Assistant – Tech.**
**(Store Keeper)**

**Qualifications :**

a. Having passed G.C.E. (O/L) examination in six subjects in one sitting with credit passes for four subjects including;
i. Sinhala/Tamil
ii. Mathematics

b. Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the "General Paper" at the G.C.E.(A/L) Examination.

c. Having successfully completed a Diploma or Certificate Course not below the N.V.Q. Level 5, conducted by a recognized Institute of Technological Training in the relevant field.

**Salary Scale relevant to the post:**
MA2-1-2016 Rs. (30,310 – 10 X 300 – 7 X 350 – 4 X 495 – 20 X 660 – 50,940) as per the Management Circular 02/2016. Salary step specified for as at 01.01.2017 of the salary scale: Rs. 20,890/= and government approved allowances.
**Age:** Should not be less than 22 years and not more than 45 years.

Self prepared applications marked the Relevant Post on the top left-hand corner of the envelope should be sent by Registered Post, addressed to the Chairman, Palmyrah Development Board, N.H.D.A. Building, 1st Floor, Kandy Road, Jaffna to be received on or before 2nd May 2017. Late applications will not be considered.
Applications from officers in Government Departments/Corporations/Statutory Boards should be forwarded through their Head of the Department. A copy may be sent directly.

**Chairman** **Tele phone No: 021 222 2034**
**Palmyrah Development Board** (C-8138) **Fax No: 021 222 4154**


# கண்ணீர் அஞ்சலி

அமரர்
**பாலசிங்கம் ரவீந்திரநாதன்**




எமது நிறுவனத்தின் சக பணியாளராகக் கடமையாற்றிய **பாலசிங்கம் ரவீந்திரநாதன்** (ரவி ஐயா) 17.04.2017 திங்கட்கிழமையன்று காலமான செய்தி கேட்டு துயரடைவதுடன் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உடுப்பிட்டி.**
**19.04.2017** (8759)

**எமரால்ட் ஹாட்வெயார் பணியாளர்கள்**

# மரண அறிவித்தல்



## அமரர் சடையர் மகாதேவன்

சுழிபுரம் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் மகாதேவன் கடந்த 17.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ராஜலட்சுமி, இன்பா, இந்திராகாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராசா, செல்வகுமார், புஸ்பநாதன் ஆகியோரின் மாமனாரும், புரவீன், சக்சனா, லாவன்யா, சேயோன், லபிசா, டிலக்சிகா, டிலக்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.04.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெரியவிளான்,**
**இளவாலை.** (8762)

**தகவல்: குடும்பத்தினர்**
**077 724 2534, 077 773 2788**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்கெட்ட நிர்வாகமே அழிவுக்குக் காரணம்

## வியாழேந்திரன் எம்.பி. விசனம்

(கொழும்பு)

**அரசியல் தலைமைகள் சிலரின் சீர்கெட்ட நிர்வாகமே மீதோட்டமுல்லயில் அனர்த்தம் ஏற்படக் காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.**



பொறுப்பற்ற அரசியல் வாதிகளின்அசமந்தப்போக்கே 30 க்கும் மேற்பட்டவர்கள் குப்பை மேடு சரிந்த அனர்த்தத்தில் உயிரிழக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் 5 சக்சஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் ஏறாவூர் 5 சேனைக்குடியிருப்பு குமார வேலியார் கிராம மக்கள் இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே, நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனவாதம் என்கின்றமலை, வங்குரோத்து அரசியல், முதலாளித்துவம் மற்றும் ஏமாற்றுப் பேர் வழிகள் அப்புறப்படுத்தப்படும் பட்சத்திலேயே, சாதாரண ஏழை மக்களும் ஏனைய மக்களுக்கு இணையாக வாழ முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## அவதானம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிக்காக சென்று நாடு திரும்பும் பெண்கள் பிறர் வழங்கும் பொருட்களை கொண்டுவருவது குறித்து அவதானமாக இருக்குமாறு, பிரதி சுங்கப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து பணிப் பெண்களுக்கு தெளிவுபடுத்த வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

10 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களுடன், குவைத்தில் இருந்து நாடு திரும்பிய பணிப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கேகாலை பகுதியைச் சேர்ந்த இவர் சிகரெட் பற்றிய விபரங்களை அறிந்திருக்கவில்லைஎன்பதோடு குவைத்திலுள்ள தரகர் ஒருவர் போலியான விபரங்களை வழங்கி அதனை அவரிடம் அனுப்பி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது என்றும் பராக்கிரம பஸ்நாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, நாடு திரும்பும் வேளை பிறரிடம் இருந்து பொதிகளை எடுத்து வருவது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். (இ-7)

## தனித்த பயணத்தை ஆரம்பிக்கத் தயார்

### எஸ்.பி.திஸாநாயக்க அறிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து செயற்பட தயாரில்லாத நபர்களை நிராகரித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தனித்த பயணத்தை ஆரம்பிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இம்முறை மே தினக் கூட்டம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பலத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## சம்பந்தன் நினைத்தால் எமக்குத்தீர்வு கிடைக்கும்

### பட்டதாரிகள் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நினைத்தால் பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்து எமது கோரிக்கைகளுக்குஒருமுடிவை எடுத்து தரமுடியும் என பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் பட்டதாரிகள் மேற்கொண் டு வரும் போராட்டம் 57ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இங்கு அவர்கள் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர். சம்பந்தன் நினைத்தால் பாராளுமன்றத்தில் வெளி நடப்பு செய்து எமது கோரிக்கைகளுக்குஒருமுடிவை எடுத்து தரமுடியும். அவரும் மௌனமாக இருக்கின்றார்.

கடந்த சில நாட்களுக்கு முன் அரசியல்வாதிகள் எங்களை வந்து பார்த்தார்கள். தற்போது அவர்களும் எங்களை மறந்து விட்டார்கள்.

எவ்வளவோ பணத்தை வெளிநாடு செல்வதற்கு இந்த அரசாங்கம் செலவிடுகின்றது. அதை வைத்து எமக்கு தொழில் வாய்ப்பு வழங்க முடியாதா என அவர்கள் கேள்வி யெழுப்பியுள்ளனர். (இ-7)

## பொட்டு அம்மானின் உடல் கிடைக்கவில்லை என்பது உண்மை

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் உடல் கிடைக்கவில்லை என்பது உண்மை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு இது தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில், இறுதி யுத்தத்தின் போது பொட்டு அம்மானின் உடல் கிடைக்கவில்லை.

அவருடைய உடலைப் படையினர் அடையாளம் காணவு மில்லை.

இதனாலேயே பொட்டு அம்மான் உயிரிழக்கவில்லை என்று இன்று கூறப்படுகிறது.

ஆனால் 2009ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது "பொட்டு அம்மான் உயிரிழந்தார்" என போர்க் களத்தில் இருந்த படையினர் உறுதி செய்துள்ளனர்.

அதை நான் நம்புகின்றேன்.

மேலும், பொட்டு அம்மான் உயிருடன் இருந்தால் அவர் இருக்கும் இடத்திலிருந்து தற்போது வெளியே வந்திருக்க வேண்டும் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-3)

## மகிந்த நழுவல்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைந்ததற்கு, இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ'வே காரணம் என்று குற்றம்சாட்டி வந்த முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தற்போது அந்த நிலைப்பாட்டில் இருந்து நழுவத் தொடங்கியுள்ளார்.

இந்திய ஊடகம்ஒன்றுக்கு மகிந்த ராஜபக்ஷ செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார்.

அதில், "2015 தேர்தலில் உங்களின் தோல்விக்கு, இந்தியாவே குறிப்பாக, 'றோ' அமைப்பே காரணம் என்று குற்றம்சாட்டியிருந்தீர்கள். அது எப்படி?" என்று மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், சிரித்துக் கொண்டே, "உங்களுக்குத் தெரியும், நான் கடந்த காலத்துக்குள் செல்வதற்கு விரும்பவில்லை. என்ன நடந்ததோ அது நடந்து விட்டது.

இப்போது இது ஒரு புதிய பக்கம்" என்று நழுவலாகப் பதிலளித்துள்ளார். (இ-3)







வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராமிய வளர்ச்சியே உயர்ச்சி எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி நேற்று பி.ப 2 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கிராமிய மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தி பொருட்கள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளதோடு அவற்றை கொள்வனவு செய்ய முடியும். (படங்கள்:உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரவன்னி...

வன்னியனின் உருவச்சிலை திறப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு பண்டார வன்னியன் உருவச் சிலையை வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையின் உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைத்துறைபற்று பிரதே செயலாளர் சி.குணபாலன், உட்பட அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின பிரதிநிதிகள், பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (செ-15)

## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளிநொச்சி

## உழவு இயந்திரம் வாடகைக்கு பெறுவதற்கான மூடிய கேள்வி கோரல்

**எமது சங்கம் மணல் ஏற்றி விநியோக நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதால் கீழ்க் குறிப்பிடப்படும் நடைமுறைகளுக்கமைவாக உழவு இயந்திரங்கள் வாடகைக்கு கோரப்படுகின்றன.**

01. உருத்திரபுரம் வடக்கு நீவில் ஆற்றில் இருந்து ஏ-9 வீதி, கணேசபுரம் வரையான பகுதிக்கு ஒரு சுமைக்கான வாடகையும், ஏ-9 வீதிக்கு கிழக் குப் பக்கமாக விநியோகிப்பதற்கு மேலதிகமாக ஏற்படும் ஒவ்வொரு கிலோ மீற்றருக்குமான வாடகையும் கோரப்படுகின்றது. இவ்வாடகையானது ஆற்றில் இருந்து உழவு இயந்திரத்திற்கு மணல் ஏற்றும் மனிதகூலி உட்பட சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. ஆகக்குறைந்த கூலியினை சமர்ப்பிப்பவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இந்நடவடிக்கையானது தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும்.
03. விண்ணப்பிப்பவர்களின் உழவு இயந்திரங்களுக்கும் இழுவைப்பெட்டிகளுக்கும் நடைமுறையாண்டிற்குரிய வாகன வரி அனுமதிப்பத்திரம், பதிவுச்சான்றிதழ், காப்புறுதி என்பன இருப்பதுடன் அதற்குரிய பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

மூடிய கேள்வி பத்திரங்களை 24.04.2017ம் திகதிக்கு முன்னர் கிடைக்ககூடியவாறு தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்(வ.து), கனகபுரம், கிளிநொச்சி எனும முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021-3208430 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**கனகபுரம், கிளிநொச்சி.** (சி-8144)

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் ஜெயநாதன்

## (இலங்கை மின்சார சபை லயன்ஸ்மன்)



துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் ஜெயநாதன் கடந்த 17.04.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மதுரைமீனாட்சியின் அன்புக் கணவரும், வாசுகி, மலர்வதனி (Germany), வசந்தகுமாரி (Colombo), ஜெயக்குமார் (UK), ஜெயராஜ் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணானந்தம், சத்திவடிவேல் (Germany), இந்திரநேசன் (Colombo), சிவரஞ்சினி (UK), நிரஜா (UK) ஆகியோரின் மாமனாரும், பேரம்பலம், காலஞ்சென்ற சுமங்கலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேதீஸ்வரன், கார்மேகன், கார்த்திகா, கார்வண்ணன், கபிலன், கிஷாந்திகா, நிஷாந்தி, சனுட்ஷா, மௌலிஷாந், இந்துயா, காவியா, அபிநயா, ஜெனிலியா, ஜெசிக்கா, ஜெஸ்வினி, ஜயனிக்கா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (20.04.2017) மு.ப 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேதவனம்வளவு,**
**துன்னாலை வடக்கு, கரவெட்டி.** (சி-8143)

**தகவல்;-**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## செல்வன்

## சிவநாதன் நிமலன் (குட்டி)

### தோற்றம்:-04.04.1990

### மறைவு:-15.04.2017

வல்வெட்டித்துறை குச்சம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வல்வெட்டித்துறை உலகுடைய பிள்ளையார் கோவில் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் சிவநாதன் நிமலன் (குட்டி) 15.04.2017 அன்று இறைவன் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவநாதன் (சக்தி)-இரத்தினேஸ்வரி (ரெத்தினா) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-பீதாம்பரநாயகி, சிவகுருநாதபிள்ளை, அரியரெத்தினம் ஆகியோரின் அன்பு பேரனும், ராஜ்குமார், மணிவண்ணன் (மணி), ராகினி மற்றும் உலகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (பாலி), சிவரெத்தினம் (ஜீவன்-மேத்திரி), இராஜேஸ்வரி (அரி அக்கா), சுபாரெத்தினம், புவனேஸ்வரி (துக்கினி அக்கா) மற்றும் உலகேஸ்வரி ஆகியோரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்ற உலகராசா மற்றும் இராஜேஸ்வரி (பூமணி) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.04.2017 புதன்கிழமை இன்று மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை ஊரணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:-குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:-**

**தாய் (இலங்கை)-0094-766929816**
**உலகராசா (இலங்கை)-0094-773544969**
**மணிவண்ணன் (லண்டன்)-0044-07440602618**
**தவக்குட்டி (லண்டன்)-0044-07984355124**
**உதயன் (லண்டன்)-0044-07415294535**

(8767)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் கான்ஸ்டபிளின் சடலம் மீட்பு

38 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சடலமாக சாலியவெள, நீலபேம்ம பகுதியில் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம்பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த லலித் குமார சிறி என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மதவாச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் கடந்த 4ஆம் திகதி துப்பாக்கியுடன் காணாமல் போயிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.(இ-7)


# Air Ticket & Visa

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்கள், விசாக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னை, மதுரை, திருச்சி விசேடவிலைக் கழிவு.

ஓமான், டுபாய், சவுதி, டோகா மற்றும் பல நாடுகளுக்கான விசாக்களை மிக விரைவில் பெறலாம்.

KING STAR TRAVELS & TOURS
223, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

E-mail : kstar9477@gmail.com
T.P : 021 722 3407,
077 244 5902, 076 943 6777

(C-8139)


# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் ரவீந்திரநாதன்

(ஓய்வு பெற்ற லிகிதர் வலயக்கல்வி அலுவலகம், பருத்தித்துறை)



பிறப்பு : 01.01.1946
இறப்பு : 17.04.2017

தும்பளை மேற்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும்கொண்ட பாலசிங்கம் ரவீந்திரநாதன் அவர்கள் 17.04.2017 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.04.2017 இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10 மணியளவில் கோரியடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வில்வளை, தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

தகவல் :- குடும்பத்தினர்


(C-8736)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

எமது குடும்பத்தலைவர்

## அமரர் சிவப்பிரகாசம் சுந்தரலிங்கம்

தோற்றம்
17 . 03 . 1938



மறைவு
20 . 03 . 2017

கடந்த 20.03.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிவப்பிரகாசம் சுந்தரலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 19.04.2017 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும், இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ் அழைப்பினைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோந்திரம்பற்றை
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல் :
திருமதி.சுந்தரலிங்கம் யோகராணி (மனைவி
திருமதி.ஜெயசீலன் விஜயா (மகள்)
திரு.பாலசிங்கம் ஜெயசீலன் (மருமகன்)

தொ.பே.இல. : 021 205 6035, 0777 314 453

(C-8137)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு : 16.09.1981
இறப்பு : 19.04.2013



## அமரர் மகாதேவன் சதீஸ்குமார்

(தொண்டைமானாறு - லண்டன்)

அன்பே எம் ஆருயிர் குமரா
பத்துமாதம் சுமந்த தாய் -
உன்னைக் காணாமல் கதறியழுகிறாள்
தோளில் சுமந்த தந்தை
துயரத்தை நெஞ்சில் சுமந்து வாடுகிறார்
அண்ணன் என்று ஓடிவரும் - உன்
அன்புச் சகோதரிகள்
அழுது புலம்புகின்றனர்
ஆண்டு நான்கு மறைந்தது
உன் நினைவுகள் எம்மைவிட்டு
மறைந்திடாது

சந்நிதி வீதி,
தொண்டைமானாறு.

மகாதேவன்
குடும்பத்தினர்

# இராசி பலன்

19.04.2017
(சித்திரை 06, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
அட்டமி பின்னிரவு 12.42 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 9.08 மணி வரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம், திருவாதிரை | | |
| சந் | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், இனிமையான நாள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படலாம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள், வேலைச்சுமை கூடும், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மகரம்:** நீண்டநேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், செய் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள்.

**தனுசு:** பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் விருந்துபசார நிகழ்வு


(படங்கள்:-பொ.சோபிகா)

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் புதுவருட விருந்துபசார நிகழ்வு நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநரின் தலைமையில் இந்த விருந்துபசார நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சித்தார்த்தன், யாழ் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன், வடமாகாண அமைச்சர்களான பா.சத்தியலிங்கம், ப.டெனீஸ்வரன், வட மாகாணத்தில் உள்ள அரச அதிபர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், வட மாகாணத்தில் உள்ள திணைக் களங்களின் தலைவர்கள், அதிகாரிகள், கட்சி பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் ஒரு அங்கமாக வடமாகாணத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புத்தகப்பைகள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டது. (இ-9)




## மணலுடன் சென்ற 2 டிப்பர் வாகனங்கள் சாவகச்சேரி பொலிஸாரால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் சாவகச்சேரிப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. நேற்றுக் காலை 6.30 மணியளவில் தனங்கிளப்புச் சந்தியில் வைத்து மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்களை பொலிஸார் மறித்து சோதனையிட்டுள்ளனர். இதன் போது குறித்த இரண்டு டிப்பர் வாகனத்திற்கும் மணல் கொண்டு செல்ல வழங்கப்பட்ட நேர அனுமதியை மீறி மணல் கொண்டு சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து இரண்டு டிப்பர் வாகனங் களின் சாரதிகளையும் கைது செய்த சாவகச்சேரிப்பொலிஸார் வாகனங்களையும் பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். கைது செய்யப் பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். (இ-89)

## புத்தாண்டு கலை நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி முத்துமாரி கலாமன்ற புத்தாண்டு கலை நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. (இ-23)

## கசிப்புடன் கைதான பெண் 21-ம் திகதி வரை மறியலில்

(கரணவாய்)

துன்னாலை மேற்குப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட பெண்ணை அன்றைய தினமே பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-60)

## சாராயத்துடன் சென்றவர் பொலிஸாரிடம் மாட்டினார்

சட்டவிரோதமாக சாராயம் கொண்டு சென்ற நபர் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு சாவகச்சேரி கனகம்புளியடிச் சந்தியில் வீதிச் சோதனையில் பொலிஸார் ஈடுபட்ட வேளையிலேயே மோட்டார் சைக்கிளில் மதுபானம் கொண்டு சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் 250 மில்லி லீற்றர் மதுபானப் போத்தல்கள் 60 கைப்பற்றப்பட்டதோடு மோட்டார் சைக்கிளும் பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு மீது நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (இ-89)

## பொலித்தீன் பாவனையை ஒழிக்க விசேட விழிப்புணர்வுப் பேரணி

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் பொலித்தீன் பாவனையை ஒழிப்பதற்கான விழிப்புணர்வுப் பேரணி இடம்பெறவுள்ளது. உலக சுற்றாடல் பாதுகாப்புத் தினமான எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏ-9 பிரதான வீதியில் நுணாவில் பொது நூலக முன்றலில் ஆரம்பித்து சாவகச்சேரி நகரை வந்தடையவுள்ளது. இதன் போது விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்படுவதோடு வீதிகளில் காணப்படுகின்ற பிளாஸ்ரிக் கழிவுகளும் அகற்றப்படவுள்ளது. பேரணி வருகின்ற வீதியில் அமைந்துள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளில் காணப்படும் பொலித்தீன் பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து பேரணியில் வருகின்ற நகராட்சி மன்ற கழிவகற்றும் வாகனத்தில் ஒப்படைக்க முடியும் என நகராட்சி மன்ற செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-89)

## வைத்தியசாலையில் பரிசோதனைக்கு கட்டணம் அறவிடுதல் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான குருதியில் சர்க்கரை அளவிடும் பட்டிகள் (Strips) யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்டு வந்தமையால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு மாத்திரமே இலவச நீரிழிவுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வெளிநோயாளர்கள் மற்றும் கிளினிக் நோயாளர்களுக்கான நீரிழிவுப் பரிசோதனைகள் வைத்திய சாலையின் சொந்த முயற்சியின் பேரில் கட்டண அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதனால் வறிய நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்ட போதும் விநியோகம் அதிகரிக்கப்படவில்லை. எனினும் கடந்த வாரத்திலிருந்து கட்டணம் அறவிடும் முறையை இடை நிறுத்தியுள்ளதோடு எமக்குத் தேவையான மேலதிக (Strips) ஐ வழங்குமாறு யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் போதுமானளவு பட்டிகளை தொடர்ச்சியாக வழங்குமிடத்து எம்மால் இலவச பரிசோதனைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அத்துடன் அரசாங்கத்தினால் வழங்கப்படும். குருதியில் சர்க்கரை அளவிடும் கருவிகளுக்கு (Glucometers) பல்வேறு பிரிவுகளில் காணப்பட்ட தட்டுப்பாடும் வணிக்கா சேஜிக்கல்ஸ் (Vanikka Surgicals) நிறுவனத்தினரின் நன்கொடை மூலமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை யின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் யோ.திவாகர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (இ

## இளவாலை வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை திறப்பு



(சாவகச்சேரி)

இளவாலை. வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையின் திறப்புவிழா நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வைத்திய சாலையின் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண ...பன் மற்றும் யாழ்.பிராந்திய பிரதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நந்தகுமார், வைத்திய நிபுணர் பேரானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன், இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வலி. வடக்கு பிரதேசசபையின் முன்னாள் தலைவர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வே.சண்முகநாதன் ஆகியோரும் கலந்து

## மதுபோதையில் வந்தவர் மாணவர்கள் மீது தாக்கு

(கரணவாய்)

தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள் மீது மதுபோதையில் வந்தவர் தாக்குதல் மேற் கொண்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தனியார் கல்வி நிலையத்திலிருந்து சென்று கொண்டிருந்த அல்வாய் மனோகராப் பகுதியைச் சேர்ந்த இரண்டு மாணவர்களை மது போதையில் வந்த நபர் ஒருவர் கொற்றாவத்தை செட்டித் தெருவில் வைத்து மறித்து தாக்குதல் மேற்கொண்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)


(படங்கள்: அராலிச் செய்தியாளர்

(யாழ்ப்பாணம்)

அராலி ஸ்ரீ முருகன் சனசமூகநிலையத்தின் 77 ஆவது ஆண்டுவிழா இறுதி நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நிலையக் கலையரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்துகொண்டார். இந் நிகழ்வில் கலை நிகழ்வுகள், சிற்பத்துறையில் ஜனாதிபதி விருது பெற்ற கலைஞர்களுக்கான கௌரவிப்பு மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

• ஆசிரியர் குறிப்பு:-

புருசோத்தமன் எழுதும் தமிழரின் தலைவிதி எப்படியாகும்? என்ற தொடர் ஒரு வரலாற்றைப் பதிவு செய்வதையும் நோக்காகக் கொண்டது.

எனவே இத் தொடரில் வெளிவருகின்ற சம்பவங்கள், கருத்துக்



கள் தொடர்பில் யாரேனும் உடன்பாட்டைக் கொண்டிருக்காவிடின் அல்லது தாம் அறிந்த வகையில் குறித்த சம்பவம், கருத்து வேறு விதமாக இருந்தது எனக் கருதினால் அவர்கள் தங்கள் கருத்துக்களை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ளமுடியும்.

இத் தொடரின் நோக்கம் யாரையும் வஞ்சிப்பதோ அன்றி புகழ்வதற்கோ ஆனதல்ல என்பதை ஏலவே இவ்விடத்தில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

தமிழ் மக்களின் சமகால நிலைமையை அப்படியே பதிவு செய்தல், தமிழ் அரசியல் தலைமைகளை நேர்வழிப்படுத்துதல்,

தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைப்பதை அனைவரும் ஒருமித்த குரலில் தெரிவிப்பதற்கான களநிலையை உருவாக்குதல் என்பனவும் இத் தொடர் முகிழ்ப்படைவதற்கு மூல காரணம் எனலாம்.

அழுவதும் கண்ணீர் விடுவதும் அவல வாழ்வு வாழ்வதும் தான் தமிழ் மக்களின் தலைவிதி என்றால், அதற்கான பரிகாரம் என்ன என்று கூடி ஆராய்ந்து அந்தப் பரிகாரத்தைத் தேட வேண்டும்.

இதைவிடுத்து தமிழ் அரசியல் தலைமை பார்த்துக் கொள்ளும் என்று வாழாதிருந்தால் நடப்பதெல்லாம் நாசகாரமாகவே இருக்கும்.

ஆகையால் தமிழ்ப் புத்திஜீவிகள் தங்கள் பணி உணர்ந்து எமது அரசியல் தலைமையை நேர்வழிப்படுத்த முனைய வேண்டும்.

எமது கட்சி தேர்தலில் இறங்கி



னால் வெற்றி நமக்கே என்ற நிலைமை இருந்தால் அரசியல்வாதிகள் மக்களின் நலனுக்காக கடுமையாகப் பாடுபட வேண்டிய அவசியம் இருக்காது. எங்கள் நாட்டு முஸ்லிம் மக்களை ஒரு கணம் பாருங்கள். அவர்கள் இன விகிதாசாரத்தில் தமிழர்களை தாண்டவுள்ளனர்.

அதுமட்டுமல்ல அரசியலிலும் அவர்கள் பலமாக இருக்கின்றனர். ஒரு அரசியல் தலைமை என்றில்லாமல், ஒருவர் தவறிழைத்தால் மற்றவருக்கு சந்தர்ப்பம் என்பதாக முஸ்லிம் அரசியல் தெளிந்த சிந்தனையோடு நகர்கிறது.

குறிப்பாக மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிசாத் பதியுதீனை எடுத்துப் பாருங்கள். அவர் முஸ்லிம் மக்களின் நலனை மையமாக வைத்து பல வேலைத்திட்டங்களை அரங்கேற்றியுள்ளார்.

றிசாத் பதியுதீனை மீறி அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாதென்ற ஒரு அரசியல் பலத்தை அவர் கொண்டுள்ளார். இது முஸ்லிம் மக்களுக்கு ஒரு சாதகமான சூழ்நிலை என்றே கூறவேண்டும்.

இலங்கையில் சிங்களவர்கள் பௌத்தர்களாக தங்களை வெளிக்காட்டுகின்றனர்.

கத்தோலிக்க சிங்களவர்கள் இருந்தாலும் அவர்களின் தாய்ச் சமயம் பௌத்தமாக இருப்பதால் அவர்கள் ஒருபோதும் பௌத்தத்திற்கு ஊறுவிளைவிக்க முற்படுவதில்லை.

கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கை ஒன்றில் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் பௌத்தத்திற்குரிய உயர் அந்தஸ்து எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது எனத் தெரிவித்திருந்தார்.

ஆக, இப்படியொரு அறிக்கையைச் சிங்கள இனம் சார்ந்த கத்தோலிக்கத் தலைவரைத் தவிர வேறு யாரிடமும் எதிர்பார்க்க முடியாது. அந்தளவிற்கு சிங்களவர்கள் பௌத்தத்தின்மீது உயிரை வைத்துள்ளனர். ஆட்சித் தலைவர்கள் பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசிபெற்ற பின்பே பதவியேற்பர். ஆனால் சிங்கள கத்தோலிக்க மதத் தலைவர்களிடம் அவர்கள் ஆசிபெறுவதோ சந்திப்பதோ இல்லை என்பதுதான் உண்மை. இதற்கு கத்தோலிக்க சிங்களவர்கள் ஒருபோதும் கண்டனம் தெரிவித்ததுமில்லை. இதனால் தான் இலங்கையைப் பௌத்த சிங்கள நாடு என்று சொல்வதில் அவர்களுக்கு இடையூறு எதுவுமில்லை.

இதேபோன்று முஸ்லிம் மக்கள் அனைவரும் இஸ்லாமியர்கள் என்பதால் மதம் என்பது அவர்களின் மார்க்கமாக அமைந்து முஸ்லிம் மக்களின் உரிமை, சுதந்திரம் என்பவற்றுக்கு வலுச்சேர்க்கின்றது.

ஆனால் தமிழர்கள் சமயத்தாலும் பிரிந்துள்ளனர். ஆட்சித் தலைவர் திருநீறு அணிந்தால் அது இறுக்கமான கத்தோலிக்கர்களுக்குப் பிடிப்பதில்லை.

மாறாக சிலுவை அணிந்தால் இறுக்கமான இந்துத்துவக் கொள்கை கொண்டவர்கள் அதை ஏற்பதில்லை.இதை நாம் சொல்லும்போது தந்தை செல்வநாயகம் ஒரு கிறிஸ்தவர். அவரை இந்துக்கள் ஏற்க வில்லையா? என்று கேட்பவர்கள் இருக்கலாம்.

என்னதான் கூறினாலும் தமிழர்கள் சைவம்- கத்தோலிக்கமும் அதன் ஏனைய உபபாகங்களும் என்ற வகையில் பல இடங்களில் முரண்படுகின்றனர். அந்த முரண்பாடுகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றி காலம் கடத்தப்படும் போது மேலும் வலுவடையும் வாய்ப்பு உள்ளது என்பது நம் தாழ்மையான கருத்து.

திருக்கேதீஸ்வரம் அமைந்த மன்னார் மாவட்டம் இன்று எப்படி மாற்றமடைந்துள்ளது. பாடல் பெற்ற தலம் திருக்கேதீச்சரம் எனும்போது அது சைவசமயத்தை அடையாளப்படுத்தவில்லை. மாறாக தமிழர்களின் பூர்வீகம், தொன்மை என்பவற்றை சாட்சியப்படுத்துகிறது.

ஆனால் தமிழர்களில் ஒருசாரார் திருக் கேதீச்சரத்தின் பெருமைக்கு இழுக்கை ஏற்படுத்த, அதன் தொன்மையை மழுங்கடிக்க எங்கள் வரலாற்று சான்றாதாரமாக இருக்கக்கூடிய கேதீச்சரத்து ஆலயத்தின் புனிதத்தைக் குறைக்க சமயத்தின் பெயரால் சதி செய்கின்றனர். இதுவே நிலைமையானால், தமிழர்கள் எங்ஙனம் உய்ய முடியும். பழைமையைப் பழைமையாகப் பேணுவதை விடுத்து இப்போது தெருக்களிலும் சந்திகளிலும் உருவச்சிலைகள் நிறுவுவதில் கடும் போட்டி நடக்கிறது. இப்போட்டியில் கத்தோலிக்க சமயத்தவர்கள் மட்டுமல்ல சைவசமயத்தவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

அரசடிப் பிள்ளையாருக்கு பெருங்கோயில் கட்டுவது தான் இன்றைய தேவையா? ஆலடி வைரவருக்கு குடமுழுக்குச் செய்து அவரைப் பூட்டி வைப்பதுதான் ஆகமம் கூறும் முறையா? நம் முன்னோர்கள் ஆலடியிலும் அரசடியிலும் வைத்து வழிபட்ட கடவுளர்களுக்கு வெளிநாட்டுப் பணம் கோயில் கட்டுது. இத்தகைய அறியாமைகள் எங்கள் இனத்தை வேரறுக்கிறது.

எனவே இவை யெல்லாவற்றையும் கடந்து தமிழினம் என்ற ஒரே கோசத்தோடு நாம் செயற்பட வேண்டும். அதற்கான ஒருகளம் தான் இத் தொடர் என்பதால், உங்கள் கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவாகட்டும்.

புருசோத்தமனின் தொடர் நாளை தொடரும்.

வளரும்

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னங்கண்டி மக்களின் போராட்டம் தொடர்கிறது

(பரந்தன்)

கிளிநொச்சி பன்னங் கண்டியிலுள்ள சரஸ்வதி கமம், ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் தமது குடியிருப்பு காணிக்கான ஆவணம் மற்றும்அடிப்படை வசதிகள் நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன இதுவரை கிடைக்கவில்லை எனக்கூறி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம். இனியும் வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தினை வழங்குங்கள் எனக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை 28 ஆவது நாளாக தொடர்ந்தது.

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-5-312)

# சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட நபர்கள் கைதாகினர்

## நீதிமன்றில் நாளை ஆஜர்

(மல்லாவி )

தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ சதுரங்கவின் உத்தரவுக்கமைய சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் சட்ட விரோதமாக ஆற்று மணலைக் கடத்தியவர்கள், மது போதையில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் செலுத்தியவர்களைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கண்டாவளை, உழவனூர் ஆகிய இடங்களில் அனுமதிப் பத்திரம் இன்றி மூன்று உழவு இயந்திரங்களில் கடத்தப்பட்ட ஆற்று மணல் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் மறுநாள் திங்கட் கிழமையும்நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் பொலிஸ் பிணையில் விடுதலை. இதேபோன்று மது போதையில் வாகனங்களை செலுத்தி 5 பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸ்பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களை நாளை வியாழக் கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் தடயப் பொருட்களைப் பாரப்படுத்துவதுடன் சந்தேக நபர்களையும் ஆஜர் படுத்தவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)




# ஆற்று மணல் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இடங்கள் கைப்பற்று

## 2 உழவு இயந்திரங்களுடன் நால்வர் கைது

(மல்லாவி )

கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது தர்மபுரம், புதுக் குடியிருப்பு ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை களஞ்சியபடுத்தி வைத்திருந்த இரண்டு இடங்களை கைப்பற்றியுள்ளதுடன் இரண்டு உழவு இயந்திரங்களுடன் நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்து தர்மபுரம், புதுக் குடியிருப்பு ஆகிய பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலி கன்னவின் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள்தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள தருமபுரம் 4, யூனிற் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அனுமதி பத்திரம் இன்றி 20, (உழவு இயந்திரங்களின் இழுவைப் பெட்டி) லோட் ஆற்று மணலைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் வீட்டின் உரிமையாளர் கைது செய்யப் பட்டுள்ளதுடன், சம்பவ இடத்திற்கு அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை ஏற்றி வந்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோன்று இந்த சட்ட விரோத களஞ்சியசாலைக்கு ஆற்று மணலை ஏற்றி வந்த உழவு இயந்திரம் பொலிஸாரைக் கண்டதும் மணலைக் கீழே கொட்டி விட்டு தப்பிச் சென்ற போது, பொலிஸார் துரத்திச் சென்று உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன், அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது கைப்பற்றப் பட்டுள்ள ஆற்று மணல் களஞ்சிய சாலையுடன், கைப் பற்றப்பட்டுள்ள உழவு இயந்திரங்களையும் கைது செய்யப்பட சந்தேக நபர்கள் மூன்று பேரையும் மேலதிக விசாரணைகளுக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேபோன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள நெத்தலியாற்றுப் பகுதியில் அனுமதியின்றி ஆற்று மணல் (30 லோட்) களஞ்சியபடுத்தி வைத்திருந்த நிலையில் அம்மணல் கைப்பற்றப் பட்டுள்ளதுடன், சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு புதுக் குடியிருப்பு பொலிஸ் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத் தகவலில் மேலும் தெரிவிக்கப்படடுள்ளது. (2-5-15)

# சுகாதாரமற்ற முறையில் இயங்கி வரும் புதுக்குடியிருப்பு சந்தை சீர் செய்யப்படும்

## பிரதேச செயலாளர் தெரிவிப்பு



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பின் மீன் சந்தை, இறைச்சி சந்தை ஆகிய இடங்கள் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதால்அவற்றை நுகரும் மக்கள் தயக்கம் காட்டி வருகின்ற னர்.

இச்சந்தையில் சிலஇடங்களில் கழிவுநீர் தேங்கி நிற்பதனால் துர்நாற்றம் வீசுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக புதுக் குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எம். கொங்காதீஸ்வரனிடம் தொடர்பு கொண்ட போது,

அவர் பொதுச்சந்தைக்கு வருகைதந்து சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளை வெளிப்படுத்திய தோடு இதுதொடர்பாக பல தடவைகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு வலியுறுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயராச்சிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது உரிய காலப் பகுதிக் குள் இதனைச் சீர்செய்து தருவதாக பதிலளித்தார். (2-5-15)

# காத்திருப்பதால் காலங்கள்தான் கடக்கின்றன உரிய தீர்வு கிடைக்குமா? என ஏங்குகின்றோம்





காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 58 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது பிள்ளைகள் தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் குறித்த போராட்டம் இரவு பகலாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-5-15)

# சாதகமான பதிலைத் தாருங்கள்; 54 ஆவது நாளாகவும் போராட்டம்






வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் 54 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

குறித்த போராட்டம் கையளிக்கப்பட்ட தமது உறவினர்கள் தொடர்பில் அரசாங்கத்தை பதிலளிக்க கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு கோரியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், இந்த நிலையில் சாதகமான பதில் கிடைக்கும் வரை தங்களது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (2-5-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 617 ஏக்கர் காணியை விடுவிக்கக்கோரி

# வட்டுவாகல் கடற்படை முகாம் முன்பாக மக்கள் திரண்டு கவனயீர்ப்பு போராட்டம்

வட்டுவாகல், வெள்ளா முள்ளிவாய்க்கால் ஆகிய கிராமங்களுக்கு சொந்தமான 617 ஏக்கர்காணிகள்கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தின் பின்னரான 2009ஆம் ஆண்டில் இருந்து இற்றை வரைக்கும் குறித்த காணியை கடற்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ளனர்.

குறித்தகாணியினுள்வயல் காணி, தென்னந்தோட்டக் காணி, பனை வளம் நிறைந்த காணி, குடியிருப்பு காணி என்பன உள்ளடங்கியுள்ளன.

இக்காணியை முற்றாக விடுக்குமாறு கோரியும் கடற்படையினரை அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்தியும் எதிர்வரும் 19,20, 21ஆகிய திகதிகளில் வட்டுவாகல் பாலத்திலுள்ள கடற்படை முகாம் வாயில் முன்பாக அமர்ந்து காணி உரிமையாளர்கள், பொது அமைப்புக்கள், கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் அபிவிருத்தி சங்கம், மீனவர் சங்கங்கள் ஆகியனஒன்றுதிரண்டுதொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டத்தை மூன்று தினங்கள் முன்னெடுக்கவுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பில் ஈடுபட்ட அனைவரும் ஒன்று திரண்டு வட்டுவாகல் பாலத்தில் இருந்து ஊர்வலமாக நகர்ந்து வட்டுவாகல்-செல்வபுரம் வீதியூடாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் பணிமனையைச் சென்றடைந்து மகஜர் ஒன்றைக்கையளிக்கவுள்ளனர். மகஜர் வழங்கிய நாளில் இருந்து இரு வாரங்களுக்குள் ஆக்கபூர்வமான பதில் வழங்கப்பட வேண்டும். சாதகமான பதில் கிடைக்காவிடின் முல்லைமாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு நிர்வாகத்தை முடக்குவோம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்து ள்ளனர். (2-5)




# பாடசாலை காணி விடுவிப்பு; பெயர்ப்பலகை நாட்டி வைப்பு



(கிளிநொச்சி)

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு சொந்தமான 571 ஆவது படைப்பிரிவினரால் கையகப்படுத்தி இருந்த காணியின் ஒரு பகுதி கடந்த ஜனவரி மாதம் விடுவிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் பாடசாலை சமூகத்தால் பெயர்ப்பலகை நாட்டி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, கடந்த வருடம் பாடசாலை சமூகத்தின் கோரிக்கைக்கு அமைய எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் பாடசாலைக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு பாடசாலைக்கு சொந்தமான இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மேற்படி காணி விடயம் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சிற்கு குறித்த பாடசாலைக்கு சொந்தமான காணியை விடுவிக்குமாறு பணிப்புரை வழங்கினார்.

இதற்கமைய பாதுகாப்பு செயலாளரினால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் ஒருபகுதி காணி கையளிக்கப்பட்டது. கையளிக்கப்பட்ட ஒரு பகுதி காணிவலயக்கல்வி அலுவலகத்தினூடாகபாடசாலை சமூகத்திற்கு வழங்கப்பட்டது.

நேற்றைய தினம் குறித்த காணியில் பாடசாலை சமூகத்தினால்பெயர்ப்பலகை நாட்டி வைக்கப்பட்டது.

அத்துடன் குறித்த காணியில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியனுசரணையுடன் வகுப்பறைக் கட்டடம் அமைக்க கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5-277)

# தாண்டிக்குளம் கந்தசுவாமி ஆலயத்தில் நூதனமான முறையில் திருட்டுச்சம்பவம்



(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளம் ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் கடந்த 16ஆம் திகதி இரவு திருடர்கள் ஆலயத்தின் ஒலிபெருக்கி சாதனம் மற்றும் உண்டியல் உடைத்து பெருமளவு பணத்தினைத் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த 16ஆம் திகதி பிற்பகல் 6மணியளவில் ஆலயத்தை மூடி விட்டுச் சென்றதாகவும் மறுநாள் காலையில் ஆலய வழிபாடுகளை மேற்தொள்ளச் சென்றபோது ஆலயம் உடைத்திருப்பது தெரியவந்துள்ளது இதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டனர்.

ஆலயத்திற்குச் சென்ற பொலிஸ் குழுவினர் ஆலய நிர்வாக சபையிடமும் ஆலய குருக்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது ஆலய மூலஸ்தானம் கத்தி கொண்டு உடைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது தெரியவந்துள்ளதுடன் ஆலயத்தின் அலுவலகத்தினை திருடர்கள் உடைத்து அலுமாரிகளை உடைத்து அதிலிருந்த சக்தி மிக்க ஒலிபெருக்கிச் சாதனத்தினை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளது தெரியவந்துள்ளது. ஆலய முன்றலிலிருந்த உண்டியலை உடைத்து அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-5-250)

# 3 ஆயிரத்து 10 மில்லியன் நிதியில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

ஜெய்க்கா நிறுவன நிதிப் பங்களிப்பில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கிராமிய கட்டுமான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 10 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் 3 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில்பிரதம செயலாளர் தெரிவிக்கையில்,

ஜெய்க்கா நிறுவன நிதிப் பங்களிப்பில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கிராமிய கட்டுமான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 10 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் 3 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் திட்டங்கள் 3 ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட வேண்டிய திட்டங்களாகும்.

இதில் கிராமிய வீதித் திருத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நீர் சேமிப்புத் திட்டம் மற்றும் குடிநீர் விநியோகம் என 3 திட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. 3 திட்டங்களும் தேவையின் அடிப்படையில் 5 மாவட்டத்திற்கும் பிரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் வீதித் திருத்தத்துடன் நீர் சேகரிப்பின் கீழ் நீர் நிலைகள் அபிவிருத்தியும் தூய குடிநீர் விநியோகத்திட்டத்தின் கீழ் குடிநீர் அற்ற பிரதேசம் இனம் காணப்பட்டு அக் கிராமத்திற்கான நீர் விநியோகத்திற்கான திட்டம் ஆகியன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை இம் மூன்று திட்டங்களிற்காகவும் மொத்தமாக 3 ஆயிரத்து 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1883.11 மில்லியன் ரூபா வீதிப் புனரமைப்பிற்கும் 695.39 மில்லியன் நீர்த்தேக்க திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள அதேநேரம் 431.5 மில்லியன் தூய குடிநீர் விநியோகத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீதித்திட்ட நிதியின் கீழ் வடக்கின் 5 மாவட்டங்களிலும் மொத்தமாக 279 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் கூடிய பட்சமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 72 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளது.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் 69 கிலோ மீற்றர் வீதியும், கிளிநொச்சியில் 50 கிலோ மீற்றர் வீதியும் புனரமைக்கப்படவுள்ளது.

இதேபோன்று மன்னாரில் 45 கிலோ மீற்றர் வீதியும் வவுனியாவில் 41 கிலோ மீற்றர் நீளமான வீதியுமாக மொத்தம் 279 கிலோ மீற்றர் வீதிகள் இனம் காணப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார். (2-5-15)

# யானை சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்; விசாரணைகள் விரைவில் ஆரம்பம்

(குருமன்காடு)

காட்டு யானையொன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குழப்பம் விளைவிக்க முயற்சித்த யானை ஒன்றை வனவளத்துறை உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியினால் சுட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து வவுனியா வனவளத்துறை காரியாலயத்தில் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் வனவளத்துறை அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் உள்ள கொம்பு வைத்த குளத்துக்கு அருகில் உள்ள பாரிய குழி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சில யானைகள் சிக்குண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரிய குழி ஒன்றில் வீழ்ந்த நான்கு யானைகளை மீட்கும் போது. யானையொன்று உயிரிழந்தது.

அவற்றை மீட்ட போது. ஆண் யானை ஒன்று வனவளத்துறை அதிகாரிகளை தாக்க முற்பட்டது.

இதன்போது வனவளத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் யானை உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் தேடி வந்த யானைகளே இவ்வாறு குழியில் வீழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2-5)

# அறநெறி பாடசாலை விளையாட்டுப்போட்டி





(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஆதி கணபதி அறநெறி பாடசாலையின். புதுவருட விளையாட்டு போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அனிருத்னன், வைத்திய அதிகாரி நிரேக்கா பிரகலாதன் கலாசார உத்தியோகத்தர் கிரிசாந்தி, கிராம சேவையாளர்கள்சோபனா, மேஹலா மற்றும் அயல் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

பாரம்பரியமான விளையாட்டுகளான, கிளித்தட்டு, முட்டி உடைத்தல், பூபந்து மாற்றம், கயிறிழுப்பு போன்றவை நடைபெற்றன.

இந்நிகழ்விற்கு அனுசரணையாளர்களாக, FEED அமைப்பினரும், ஈழத்து சிதம்பர கோவில் நிர்வாகமும் செயற்பட்டன. (2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேவிளம்பி வருட இராசி பலன்

## 14.04.2017 - 13.04.2018

# ஆரம்பத்தில் குரு பார்வை! ஆவணிக்கு மேல் அதன் அருள் தேவை!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விமர்சனங்களுக்கு பயப்படாமல் வெளிப்படையாக பேசும் மீன இராசி நேயர்களே!

துர்முகி வருடம் முடிந்து ஹேவிளம்பி புத்தாண்டு தொடங்குகிறது. ஆண்டின் தொடக்கத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே குருப் பெயர்ச்சி வரை உங்களுக்கு கூடுதல் நன்மை கிடைக்கப் போகிறது. அதன் அருட்பார்வையால் அனைத்துக் காரியங்களிலும் உங்களுக்கு வெற்றியை வழங்கும்.

இராசிநாதனாக விளங்கும் குரு வக்ரம் பெற்று சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். கேந்திராதிபத்ய யோகம் பெற்ற கிரகங்கள் இப்படி வலிமையிழக்கும் பொழுது, மிகுந்த நன்மைகளை வாரி வழங்கும். என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அவற்றை ஒவ்வொன்றாகச் செய்து முடிக்க வாய்ப்புகள் கைகூடிவரும். உடல்நலப் பாதிப்புகள் அகலும். உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும்.

தடைகளை முறியடிப்பது குருவின் பார்வை பலம்தான். அந்த குரு புதன் வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார். எனவே உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்கள் உங்களை விட்டு விலகுவர். வறுத்தெடுத்த துன்பங்கள் வந்த வழியே திரும்பிச் செல்லும். விவாகத்தால் ஏற்பட்ட விவகாரங்கள் விலகும்.

உத்தியோகத்தில் ஏற்பட்ட தொல்லைகள், வீண் பழி அகலும். மேலிடத்தில் உங்களுக்குரிய மரியாதை கிடைக்கும். தொட்டது துலங்கும். இந்த நேரத்தில் 6இல் ராகுவும், 12இல் கேதுவும் அமர்ந்திருப்பது ஒருவழிக்கு யோகம்தான். ஆண்டின் தொடக்கத்திலேயே அஷ்டலட்சுமி யோகம் செயற்படப் போகிறது. வேண்டிய நற்பலன்கள் கிடைக்கும். வெளிநாட்டு யோகம் கைகூடும்.

ஏற்றமும் மாற்றமும் வந்து கொண்டேயிருக்கும். எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். கொடுத்த வாக்கையும் காப்பாற்றுவீர்கள். குருவின் பார்வை ஜென்ம இராசியிலும், 3,11 ஆகிய இடங்களிலும் பதிவதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தடம் மாறிச் சென்ற உடன்பிறப்புகள் தானாக வந்து சேருவர்.

துணிந்து எடுத்த முடிவுகளால் துயரங்களில் இருந்து விடுபடுவீர்கள். பணிந்து வணங்கும் தெய்வங்கள் உங்களுக்கு பக்கத் துணையாக இருக்கும். வழக்குகளில் வெற்றி காண்பீர்கள். மனம் விட்டுப் பேசி மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்வீர்கள். எதிரிகள் ஸ்தானம் வலுவிழக்கும் இந்த நேரத்தில், புதிய திருப்பங்களைக் காணப் போகிறீர்கள்.

பஞ்சம ராகு[illegible] பதவிகள் கிடைக்கலாம். விருந்துகளிலும், பதவியில் உள்ளவர்களுக்கு உத்தியோக உயர்விற்கு உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். உத்தி யோகம் சம்பந்தமாக வெளிநாடுகளில் இருந்தும் கூட உங்களுக்கு அழைப்புகள் வரலாம். திசாபுத்தி பலம்பெற்றிருந்தால் அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஒருசிலருக்கு மனதிற்கு உகந்த இடத்திற்கு இடமாறுதல் கிடைக்கும்.

வருடத் தொடக்கத்தில் 9-ம் இடத்தில், வக்ர இயக்கத்தில் சனிபகவான் சஞ்சரிக்கிறார். இலாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி. உங்களுக்கு இலாபத்தையும் கொடுத்து, அதற்கேற்ப விரயத்தையும் கொடுக்கும் பொறுப்பு அவரிடம் உள்ளது. எனவே புதிய வாய்ப்புகளும், புதிய ஒப்பந்தங்களும் வருடத் தொடக்கத்தில் வந்து சேரும். மண், பூமி வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெற்றோரிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். தாமதப்பட்ட காரியங்கள் எல்லாம் தடையின்றி நடைபெறும், சேமிப்பு உயரும்.

ஆண்டின் தொடக்கத்தில் 6இல் ராகுவும், 12இல் கேதுவும் இருக்கிறார்கள். அஷ்டலட்சுமி யோகத்தின் விளைவாக நற்பலன்கள் உங்களை நாடிவரப் போகிறது. பகைமாறும், பழிச்சொல்லும் அகலும். எதிரிகள் உதிரிகளாவர். நண்பர்களின் கூட்டம் அதிகரிக்கும். உறவினர்களின் மனக்கசப்பு மாறும். குடும்பத்துடன் பயணம் மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விருப்ப ஓய்வின் மூலம் வரவேண்டிய தொகை வந்து சேரும்.

கேது பலத்தால் பயணங்கள் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். குடும்ப முன்னேற்றம் கருதி குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். ராகு-கேதுக்களுக்குரிய வழிபாடும், குரு பிரீதியும் முறையாகச் செய்தால் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முக்கியப் புள்ளிகளில் ஒருவராக நீங்கள் மாறவும் வழி பிறக்கும்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

இந்த ஆண்டு 27.07.2017 அன்று ராகு- கேதுக்களின் பெயர்ச்சி நடைபெற உள்ளது. உங்கள் இராசிக்கு 11ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் கேதுவும், 5ஆம் இடமான புத்திர ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். பின்னோக்கி நகர்ந்து செல்லும் இந்தக் கிரகங்கள் உங்கள் வாழ்க்கையில் எண்ணற்ற நற்பலன்களை வழங்கப்போகின்றன. கண்ணேறுபடும் விதத்தில் கையிருப்புகள் கூடும். முன், பின் தெரியாதவர்கள் கூட உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பார்கள். தெம்பும், உற்சாகமும் உடலில் குடிகொள்ளும். திறமை பளிச்சிடும்.

முன்பு பலமுறை வெளிநாடு செல்ல வாய்ப்பு வந்தும் மறுத்து வந்த நீங்கள், இப்பொழுது ஒத்துக்கொள்ள முன்வருவீர்கள். உங்களுக்கு பாலிய நண்பர்களோ, பக்கத்தில் இருந்து பணிபுரிந்தவர்களோ, கடல்தாண்டி உங்களை அழைத்துச் செல்ல முன்வருவர். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். மூத்த சகோதரமும் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவார். பணப் புழக்கம் அதிகரிக்கும். செய்ய நினைத்த காரியத்தை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள்.

விழாக்களிலும் கலந்துகொண்டு மகிழ்வீர்கள். பெரும் திரளானோர் உங்களுக்கு ரசிகர்களாக இருப்பர். காரிய வெற்றி ஏற்படும். மூதாதையர்களின் சொத்து முறையாக வந்து சேரும். பாதை தெரியாமல் தத்தளித்தவர்களுக்கு நண்பர்கள் வழிகாட்டுவர். பொன், பொருள் சேர்க்கை உண்டு.

பிள்ளைச் செல்வங்கள் துள்ளி விளையாட இன்னும் புத்திரப்பேறு வாய்க்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு செய்யும் பரிகாரங்களால் பலன் கிடைக்கப் போகிறது. வாரிசுகளின் முன்னேற்றம் கண்டும் மகிழ்ச்சி கொள்வீர்கள். ஆன்மீகப் பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு அமைதி காண இயலும். தாய்மாமன் வழியிலும் தகுந்த பலன் கிடைக்கும்.

பொதுவாக கசந்த காலங்கள் வசந்த காலங்களாக மாறுகின்ற நேரமிது. அரசுப் பணிகள் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்தவர்களுக்கு விரைவில் பணி கிடைத்து வெற்றி முகம் காட்டப்போகிறீர்கள். நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும் நேரமிது. மதிப்பும், மரியாதையும் கூடும். பொது நலத்தால் புகழ் குவியும்.

குருப்பெயர்ச்சிக் காலம்!

இந்த ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி (02.09.2017) அன்று குருப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இப்பொழுது பெயர்ச்சியாகும் குரு உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்திற்கு அல்லவா வருகிறார். இராசிநாதன் 8இல் வருவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லைகளும் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும்பொழுது கவனமுடன் செல்வது அவசியம். ஊர் மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும்




திடீரென வந்து திக்குமுக்காட வைக்கும்.

எட்டினில் குருதான் வந்தால்
எண்ணற்ற மாற்றம் சேரும்!
சுற்றத்தார் பகைவர் ஆவார்!
சுகமெல்லாம் குறைந்து போகும்!
கட்டாயம் குருவை நீங்கள்
கைகூப்பித் தொழுது நின்றால்
திட்டங்கள் வெற்றி யாகும்!
தெய்வங்கள் துணையாய் நிற்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது எட்டினில் குரு வரும்பொழுது மிகவும் கவனம் தேவை. எதைச் செய்தாலும் அது எதிரிகளுக்குச் சாதகமாகவே முடியும். மதிப்பையும் மரியாதையையும் தக்க வைத்துக் கொள்வது அரிது. பொருள் விரயங்கள் அதிகரிக்கலாம். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதன் மூலம் எண்ணிய காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். திட்டமிட்ட [illegible] திசைமாற்றம் ஏற்படும். சுற்றத்தார் பகை பாராட்டுவர். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். மிக மிக விழிப்புணர்ச்சி தேவைப்படும் நேரமிது.

குருவின் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்தந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாய் நல்ல முடிவிற்கு வரும். பெற்றோர்களின் உடல்நலம் சீராகும். கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம்.

சனிப்பெயர்ச்சிக் காலம்!

இந்த ஆண்டு மார்கழி மாதம் 4ஆம் திகதி (19.12.2017) சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இந்தச் சனிப்பெயர்ச்சியின் விளைவாக 10ஆம் இடத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். 10ஆம் இடம் கொஞ்சம் முத்தான இடமாகும். தொழில் முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்ள வைக்கும் இடமாகும். அங்குவந்த சனிபகவானால் தொழில் முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். சுய தொழிலில் இலாபம் கிடைக்கும். போட்டிக் கடை விரித்தோர் விலகுவர். உத்தியோகத்தில் உள்ளவர்கஞ்க்கு நிர்வாகத் திறமை பளிச்சிடும்.

தலைமைப் பொறுப்புகள் தானே தேடி வரும். உங்கள் திறமைக்குப் பரிசுகளும், பாராட்டுக்களும் கூடக் கிடைக்கலாம். செல்வந்தர்களின் ஒத்துழைப்போடு சிலர் கிளைத்தொழில் தொடங்க முன்வருவர். கூட்டுத்தொழில் செய்ய முன்வருபவர்கள் பங்குதாரர்களின் ஜாதகத்தையும் பரிசீலனை செய்து பார்ப்பது நல்லது. அரசு வழி அனுகூலங்கள் கிடைக்கும். ஒருசிலர் வங்கிக் கடன் மூலம் தொழில்ல வளப்படுத்திக் கொள்வர்.

10ஆம் இடம் கர்ம ஸ்தானம் என்பதால் பெற்றோர்களின் ஆரோக்கியத்தில் திடீர் பாதிப்புகள் ஏற்படலாம். சனிபகவான் வழிபாடும், எள்தீபமும் ஏற்றுவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடிவரும்.

செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது நல்லது. சிறப்பு வழிபாடாகச் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் உள்ள முத்துவடுகநாத சித்தர்கோவில் வழிபாட்டை மேற்கொண்டு வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்


மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கம் வசந்தமாக இருக்கும். வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். உடனிருப்பவர்களும், உறவினர்களும் ஒத்துழைப்புச் செய்வர். கடன்சுமை குறையும். கட்டடம் வாங்கும் முயற்சி கைகூடும். தடம்மாறிச் சென்றவர்கள் தானாக வந்திணைவர். கல்யாணக் கனவுகள் நனவாகும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். ஒற்றுமை பலப்படும். உதாசீனப்படுத்தியவர்கள் ஓடிவந்திணைவர்.

பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்கதாக இருக்கும். அஷ்டமத்து குருவின் சஞ்சாரத்தின் பொழுது ஆரோக்கியத் தொல்லை உண்டு. அதிக விரயம் ஏற்படும். உத்தியோக மாற்றம், ஊர் மாற்றங்கள் உங்கள் மனதிற்குப் பிடிக்காத இடத்திற்கு அமையும். சனிப் பெயர்ச்சியால் தொழில் வளர்ச்சி கூடும்.பெற்றோர்களின் உடல்நலத்தில் கவனம் தேவை. விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும். சனிவழிபாடும், சர்ப்ப சாந்தியும் தடைகளை அகற்றித் தனவரவைக் கொடுக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையின் முதுசொம் பற்றி...




**வல்வை ந.அனந்தராஜ் எழுதிய வல்வையின் முதுசொம் நூல் ஒரு பார்வை...**

ஈழத்தின் சென்னி என அழைக்கப்படும் வடமராட்சியில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் வரலாற்றுப் பெருமையும் புகழும் மிகு நகரமாக திகழும் வல்வெட்டித்துறை தனித்துமான அடையாளங்களையும் பண்பாடு, கலை, கலாசார அம்சங்களையும் கொண்டு திகழ்கின்றது.

இவ் வல்வெட்டித்துறை நகரின் வரலாற்றுப் பாரம்பரியங்களை எடுத்தியம்பும் நூல்கள் பல எம்மிடம் உள்ளன. இதன் தொடர்ச்சியாக இப்பிரதேச வரலாற்றின் ஒரு பகுதி கலாபூஷணம் வல்வை ந.அனந்தராஜ் அவர்களால் மீளவும் நூலுருவாக்கம் செய்யப்பட்டு 'வல்வையின் முதுசொம்' என்ற பெயரில் எமது வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையின் வெளியீடாக வெளியிடப்படுவதனையிட்டு பேருவகை அடைகின்றோம்.

இவ் வெளியீடு காலத்தின் தேவையாகும். இந்நூல் தற்கால செய்திகளை உள்வாங்கி இற்றைப்படுத்திய தகவல்களை உள்ளடக்கியதாக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

மேலும் இந்நூல் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி அனுசரணையுடன் வெளிவருவது சிறப்பிற்குரியது.

நாடறிந்த கல்விமானும், கல்வி நிர்வாகத்துறையில் பணியாற்றி வரும் பல்வேறு நூல்களை வெளியிட்டவரும், கலாபூஷணமும், வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தவிசாளரும், எமது வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையின் உறுப்பினரும், வல்வையின் மைந்தனுமாகிய திரு. ந.அனந்தராஜ் அவர்கள் இந்நூலினை பல சிரமங்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புணர்வுடன் ஆக்கித் தந்துள்ளார்.

வல்வெட்டித்துறையின் வரலாற்றில் நினைவுகூரப்பட வேண்டிய முதுசங்களாகிய இருபது விடயங்களை எளிமையாகவும் ஆழமாகவும் சான்றாதாரங்களுடனும் தேவைக்கேற்ப புகைப் படங்களுடனும் இந் நூலில் உள்வாங்கி இருக்கிறார்.

இவ் ஒவ்வொரு முதுசங்களும் ஒவ்வொரு வகையில் வல்வெட்டித்துறையின் வரலாற்றையும் அடையாளங்களையும் தனித்தன்மையினையும் வாழ்வியல் முறைமைகளையும் பண்பாட்டம்சங்களையும் வல்வெட்டித்துறையின் எழுச்சிக்கு புத்துயிர் அளித்த பெரியார்கள், அறிஞர்களையும் அவர்களின் சரித்திரங்களையும் கூறிச் செல்கின்றது.

வல்வெட்டித்துறையின் மிக நீண்ட நெடிய வரலாற்று பெருமைகளின் ஒரு குறுக்கு வெட்டுப் பார்வையை இன்றைய நிலையில் அறிந்து கொள்வதற்கும் வல்வெட்டித்துறையின் வளத்தையும் வாழ்வையும் ஆய்வு நோக்கில் அணுகவும் இந் நூல் மிக முக்கியமான பங்கெடுக்கும் எனத் துணிந்து கூறலாம்.

இப்பெரு முயற்சியை மேற்கொண்டு வல்வெட்டித்துறை நகரின் பெருமைகளில் கணிசமானவற்றை பேச முனைந்து அதை நூலுருவாக்கித் தந்து எமது கலாசாரப் பேரவையின் வெளியீடாக "வல்வை முதுசொம்" என்ற பெயரில் வெளியிட அனுமதித்த கலாபூஷணம் வல்வை ந.அனந்தராஜ் அவர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந் நூல் வெளியீட்டிற்கு நிதி அனுசரணை வழங்கிய வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்நூல் வெளியீட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய எமது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருக்கும் எனது நன்றிகள்.

எமது கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற ''வல்வையின் முதுசொம்'' வடமராட்சி மண்ணின் தனித்துவம் மிக்க வல்வெட்டித்துறை நகரின் அருமை பெருமை மிக்க தகவல்களை உலகறியச் செய்யும் முக்கியமான ஆவணங்களில் ஒன்றாக விளங்கும் என நம்புகின்றேன். இந்நூல் சிறப்பாக வெளிவர உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துப் பணிகின்றேன்.

இ.த.ஜெயசீலன்
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

## காட்டில் குழந்தையை வீசிய தாய் கைதானார்

(கொழும்பு)

பச்சிளம் குழந்தையை காட்டில் வீசியெறிந்த தாயொருவரை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிலாபம் அருகே மாதம்பை - ஹேனேபொல, கல்முருவ பிரதேசத்தில் வசித்த 37 வ்யதான திருமணமாகாத பெண்ணொருவரே நேற்று முன்தினம் இவ்வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை தனது வீட்டில் வைத்து குழந்தையொன்றைப் பிரசவித்துள்ள அவர், அதனை அயலில் இருந்த காட்டுப் பகுதியில் வீசியெறிந்துள்ளார்.

மாடுமேய்க்கச் சென்ற ஒருவர் குழந்தையின் அழுகுரல் கேட்டு, பொலிஸாருக்குத் தகவல் அளித்துள்ளார்.

இதன் பின்னர் குழந்தை பொலிஸாரினால் மீட்கப்பட்டு தற்போது சிலாபம் வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் குழந்தையின் தாய் என்று சந்தேகிக்கப்படும் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இத்தி

Botanical Name: Ficus Talboti
Eng Name: Rhmboid leaved fig
Sans: Diekash

இத்தி மரமானது பெரிதாக வளரக் கூடியது. இதன் முழு மரமும் அழுத்தமாகவும் பளபளப்பாகவும் காணப்படும். இந்த தாவரத்தில் பெரும்பாலும் பால்பகுதி செறிந்து காணப்படும். அதாவது இலைகளை ஒடிக்கும் போது பால் சிந்தக் கூடியது. இதன் பட்டையானது அழுத்தமான நரை நிறமுடையது.

இலைகள் ஒவ்வொன்றினதும் நீளம்8.8-10 சென்றி மீற்றர் வரை காணப்படும். இலைகள் நீள் வட்டவடிவம் போல்நடுப்பகுதியில் காணப்பட்டு அதன் முனைப்பகுதி மழுங்கிய கூர் அமைப்புடையதாகக் காணப்படும். இலையின் முழுப்பாகமும் அழுத்தமாகவும் பளபளப்பாகவும் காணப்படும். ஒவ்வொரு இலையிலும் 3-5 நரம்புகள் காணப்படும்.

பக்க நரம்புகள் 6-9 சோடி காணப்படும். இவை கூடுதலாக கீழ் பாகத்தில் தெரியும். இலையின் காம்பு 2-2.5 சென்றி மீற்றர் வரை காணப்படும்.

ஆண் பூக்கள் கொஞ்சமாகஎண்ணிக்கையில் காணப்படும். பூக்கள் காம்பற்று காணப்படும். இத்தியின் பூக்களில் 3 புல்லிகள் காணப்படும். பெண் பூவில் காணப்படும் சூலகம் மேற்புறமாகக் காணப்படும்.

இதன் பிஞ்சு கழிச்சல், மாதவிடாயின் போது ஏற்படும் இரத்தப் போக்கு கூடிய நிலை,உடற்சூடுபோன்றபிணிகளைப் போக்கும். இப் பிஞ்சுகளை அரைத் தேனும் இதன் பட்டையைக் குடித்தேனும் அருந்த மேற்கூறிய நோய் நீங்கும்.

இதன் காய்களை நெய் விட்டுவெதுப்பிஉண்ண மலக்கட்டு நீங்கி மலமிளகிப் போகும். இதன் பட்டையை காய வைத்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக வற்றிய பின் குடிநீர் எடுத்து வயிற்றோட்டம், பெருநோய் (குட்ட நோய்) நீங்க பயன்படுத்தலாம்.

இதன் பட்டையின் குடிநீரை தனித்தோ அல்லது ஆல், அரசு, அத்தி, நாவல் இவற்றின் பட்டைகளுடன் சேர்த்துகுடிநீர்காய்ச்சிஅதனை கழுவி நீராக கரப்பான், கிரந்தி, புரையோடும் புண்களைக் கழுவ அந்த புண்ணிலுள்ள அழுக்குகளை அகற்றி, குருதி, சீழ் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும்.

இத்தி மரத்தின் துளிர் இலையை தயிர் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் கழிச்சல் நோய் குணமாகும். இத்திப் பிஞ்சை சீரகம் சேர்த்து அவித்து மாதவிடாயின் போது ஏற்படும் அதிக இரத்தப் போக்கு குறையும். இத்திப் பட்டையைதண்ணீரில்போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடித்தால் (60 மில்லி) உஷ்ண நோய்கள் அனைத்தும் குணமாகும்.



இதன் பிஞ்சு கழிச்சல், பெரும்பாடு, உடற் சூட்டினால் [illegible] போக்கும்.

இப் பிஞ்சுகளை அரைத் தேனும் இதன் பட்டையைக் குடிநீர் செய்தேனும் குடித்து வர மேற்கண்ட பிணிகள் நீங்கும். இதன் காயை நெய் விட்டு வெதுப்பி சாப்பிட்டால் மலக்கட்டு நீங்கும்.

ஒரு கைப்பிடியளவு இத்திப் பட்டையை ஒரு சட்டியில் போட்டு இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டுநன்றாகக்கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி அதைக் கொண்டு புண்ணைக் கழுவித் துடைத்து எந்த மருந்தைப் போட்டாலும் ஆறாத புண் ஆறும்.

உடலில் அதிக உஷ்ணம் ஏற்பட்டால் கண் எரிச்சல், வயிற்றுப்போக்கு, உடலில் சூடு, வயிற்று வலி ஏற்படும். இவைகளைப் போக்க 25 கிராம் இத்திப் பட்டையை இடித்து 200 மில்லி வெந்நீரில் போட்டு 20 நிமிட நேரம் ஊறைவிட்டு வாத்து காலை, மாலை 50 மில்லி வீதம் அருந்த குணம் ஏற்படும்.

இரத்த மூலம், சீதபேதி குணமாக இத்திப்பட்டை, அத்திப் பிஞ்சு, மாமரத்தின் உள் பட்டை, கொவ்வை பிஞ்சு இலைகளை வகைக்கு 10 கிராம்எடுத்துஅம்மியில்வைத்து வாழைப்பூவை இடித்து பிழிந்த சாற்றில் அரைத்து மெழுகு பதத்தில் சுண்டக்காய ளவு உருட்டி உலர்த்தி கீசாவில் பத்திரப்படுத்தி காலை, மாலை ஓர் உருண்டை வீதம் வாயில் போட்டு வெந்நீர் குடித்து வந்தால் இரத்த மூலம், ஆசனக் கடுப்பு, சீதபேதி குணமாகும்.

சிறுநீரை கட்டுப்படுத்த, அளவு மீறிச் சிறுநீர் வெளியேறும். இதைக் கட்டுப்படுத்த இத்திப் பட்டை, அத்திப்பட்டை ஒவ்வொன்றும் 20 கிராம் எடுத்து அதை அம்மியில் வைத்து நைத்து சட்டியில் போட்டு 200 மில்லி தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி இளஞ்சூடாக இருக்கும் போதே 100 மில்லி காலை, மாலை தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட சிறுநீர் கட்டுப்படும்.

இத்தி மரத்தை கீறினால் பால் வடியும். இந்தப் பாலை சேகரித்து அதேயளவு வெண்ணெய் சேர்த்து சாப்பிட்டால் இரத்தபேதி குணமாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இத்தி அல்லது அத்திமரத்தில் இருந்து பால் எடுத்து வீங்கிய மூட்டுப் பகுதிகளில் தேய்த்துக் கொண்டால் வீக்கம் குறையும்.

இத்திக் காய்களை துவரம் பருப்பு சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தால் உடல் அரிப்பு குணமாகும்.

இத்திப் பழங்களை ஒரு நாளைக்கு 2 வீதம் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

இத்திப் பழங்களை வெந்நீரில் ஊறவைத்து பிசைந்து வடித்து கர்க் கண்டு அளவாகச் சேர்த்து பானம் தயாரித்து வெப்ப காலத்தில் அருந்த உடற்சூடு தணியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கானாவில் அனல் காற்றால் 21 பேர் மரணம்

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலத்தில் கடந்த ஒரு வாரத்தில் வெயிலுக்கு 21பேர் பலியாகியுள்ளனர். அனல் காற்று வீசுவதால் பகல் நேரத்தில் மக்கள் வெளியே வரவே பயப்படுகிறார்கள்.

அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பே கோடை வெயில் தாக்கம் மிகவும் அதிகமாக இருக்கிறது.

பல மாநிலங்களில் வெயில் 100 டிகிரிக்கு மேல் கொளுத்துகிறது.

தெலுங்கானா, ஆந்திர மாநிலங்களில் சுட்டெரிக்கும் வெயிலால் மக்கள் கடும் அவதிப்பட்டு வருகிறார்கள். அனல் காற்று வீசுவதால் பகல் நேரத்தில் மக்கள் வெளியே வரவே பயப்படுகிறார்கள்.

தெலுங்கானா மாநிலத்தில் கடந்த ஒரு வாரத்தில் வெயிலுக்கு 21 பேர் பலியாகியுள்ளனர். அங்கு பல மாவட்டங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில் தகிப்பதால் வயதானவர்கள் தாக்குபிடிக்க முடியாமல் திணறுகிறார்கள்.

தெலுங்கானாவில் ஐதராபாத், ஆதிலாபாத், நிஜாமாபாத், திருப்பதி, நல்கொண்டா, கரீம்நகர் ஆகிய மாவட்டங்களில் 110 டிகிரிக்கு வெயில் அடிக்கிறது. (இ-3)

## பாரதச் செய்தி

# குடும்ப ஆட்சி சரியல்ல

## ஓ.பி.எஸ்.கடும் எதிர்ப்பு

(சென்னை)

கட்சியும், ஆட்சியும் ஒரே குடும்பத்தில் இருப்பது சரியல்ல என்றும், அ.தி.மு.க. இணைவது குறித்து சசிகலா அணியில் குழு அமைக்கப்பட்டு இருப்பதாகவும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. இரு அணிகளாக பிரிந்தது. முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஒரு அணியாகவும், சசிகலா தலைமையில் ஒரு அணியாகவும் செயற்பட தொடங்கினர்.

பரபரப்பான இந்தசூழ்நிலையில் ஓ.பன்னீர்செல்வம் நேற்று தனது சொந்த ஊரான பெரியகுளத்துக்கு வந்தார். அங்கு தனது ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து பேசினார். அதன் பிறகு நிருபர்களிடம் ஓ.பன்னீர் செல்வம் கூறியதாவது,

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் கட்டிக்காத்த அ.தி.மு.க. என்ற மாபெரும் இயக்கம் ஒரு குடும்பத்தின் கையில் சிக்கி விடக்கூடாது. கட்சியும்



ஆட்சியும் ஒரு குடும்பத்திடம் சிக்குவது சரியல்ல.

இரு அணிகளும் இணைந்து செயற்படுவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டதற்கு நாங்கள் காரணம் அல்ல. தேர்தல் ஆணையத்தில் தேவையான அனைத்து ஆவணங்களும் அளித்துள்ளோம்.

எனவே இரட்டை இலை எங்களுக்கே கிடைக்கும். இரு அணிகளும் இணைவது குறித்து சசிகலா அணி சார்பில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் என்னிடம் இதுவரை பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அந்த குழுவிடம் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# நாடு அனைவருக்கும் சொந்தம்; பிரதமர் நரேந்திர மோடி உறுதி



(டில்லி)

நம் நாடு இங்கு வாழும் ஒவ்வொருவருக்கும் சொந்தம். இதில் பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

குஜராத் மாநிலம், சூரத் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது, நம் நாடு கட்டமைக்கப்படுவதும், இயங்குவதும் அரசாங்கங்கள், அரசர்கள் மற்றும் அரசியல்வாதி களால் அல்ல. நாட்டுமக்களின் சேவை மற்றும் கடின உழைப்பால் மட்டுமே கட்டமைக்கப்படுகிறது. இயங்குகிறது. மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் அரசு செயற்பட முடியாது. எனவே நாட்டுக்காக அனைத்து மக்களும் பாடுபடவேண்டும்.

கூட்டு சமூக பொறுப்புணர்வு மீதான நம்பிக்கையால் நமது நாடு கட்டமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் சத்திரங்கள், கிணறுகள், கோசாலைகள் மற்றும் நூலகங்கள் கட்டப்பட்டுள்ளன.

இவை அரசாங்கத் தால் கட்டப்படவில்லை. மக்களாலேயே கட்டப்பட்டுள்ளன.

விடுதலைக்குப் பிறகு நம்மிடம் இருந்த கூட்டு சமூகப் பொறுப்புணர்வு மங்கத் தொடங்கி விட்டது. ஆனால் இந்த நம்பிக்கையை புதுப்பிப்பதற்காக நாம் மீண்டும் இத்திசையில் பயணிக்கிறோம்.

நம் நாடு இங்கு வாழும் ஒவ்வொருவருக்கும் சொந்தம். இதில் பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றார்.

ரூ.400 கோடி செலவில் 550 படுக்கை வசதியுடன் கட்டப்பட்ட கிரண் உயர் சிகிச்சை வைத்தியசாலையை இந்நிகழ்ச்சியில் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

**சிறுமியால் பரபரப்பு**

சூரத் நகரில் நேற்று முன்தினம் விமான நிலையம் நோக்கி பிரதமர், காரில் செல்லும்போது, திரளான மக்கள் மத்தியில், நான்சி என்ற 4 வயது சிறுமி அவரது கவனத்தை ஈர்த்தாள். தனது காரை நோக்கி அச்சிறுமி தயக்கத்துடன் முன்னேறும் போது, பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்துவதை பிரதமர் கண்டார். உடனே காரை நிறுத்தச் சொன்ன பிரதமர், சிறுமியை அழைத்து வரச் சொன்னார். காரிலிருந்து இறங்கி சிறுமியிடம் சில வார்த்தைகள் பேசிய பிரதமர், பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

சிறுமியுடன் பிரதமர் பேசும் போது அங்கிருந்த மக்கள், 'மோடி மோடி' என உற்சாக குரல் எழுப்பினர். (இ-3)

# சசிகலா சந்திக்க மறுப்பு? சென்னை திரும்பிய தினகரன்

(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் உள்ள சசிகலா ஆட்சியும், கட்சியும் தன் பிடியில் இருந்து நழுவி வருவதால் மீள முடியாத அதிர்ச்சியில் தினகரனுடனான சந்திப்பை தாமாகவே தவிர்த்தார் என்று கூறப்படுகிறது.



ஆர்.கே.நகர் தொகுதி தேர்தல் இரத்து, அமைச்சர் விஜய்பாஸ்கர் வீட்டில் வருமான வரி சோதனை, உள்ளிட்ட அடுத்தடுத்த நெருக்கடிகளால் சிறையில் உள்ள சசிகலாவை சந்தித்து ஆலோசனை நடத்த அ.தி.மு.க. அம்மா பிரிவு துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் முடிவு செய்திருந்தார்.

இதற்காக அவர் நேற்று முன்தினம் காலை சென்னையில் இருந்து பெங்களூர் செல்வதாக கூறிவிட்டு சென்றார். ஆனால் மாலை 6.30மணிவரை அவர்பெங்களூர் சிறைக்கு வரவில்லை. சசிகலாவையும் சந்திக்கவில்லை.

வேலூர் அருகே போக்குவரத்து நெரிசலில் சிக்கியதால் அவரால் உரிய நேரத்தில் பெங்களூர் வர இயலவில்லை என்று கூறப்பட்டது.

ஆனால் அவர் தமிழக, கர்நாடக எல்லையில் உள்ள ஆனேக்கல் பகுதியில் உள்ள நண்பரின் பண்ணை வீட்டுக்கு சென்றதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு சசிகலாவை சந்திக்க தினகரனுக்கு நேரம் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் டி.டி.வி. தினகரன் அந்த நேரத்துக்கு சிறைக்கு வரவில்லை.

இதையடுத்து மாலை 5.30 மணிக்கு தினகரன் வருவார் என்று அவரது ஆதரவாளர்கள் சிறைத்துறையினரிடம் தகவல் தெரிவித்தனர். சிறைத் துறையினரும் அதற்கு அனுமதி அளித்தனர். ஆனால் 5.30 மணி வரை தினகரன் வரவில்லை.

இதற்கிடையே தமிழக பதிவு எண் கொண்ட ஒரு சொகுசு கார் 2 தடவை பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறைப் பகுதிக்கு வந்தது. அந்த காரில் தினகரன் வந்ததாக தெரிகிறது. ஆனால் அந்த கார் சில நிமிடங்களில் புறப்பட்டு சென்றுவிட்டது.

6 மணிக்கு பிறகு சிறைக்கு உள்ளே பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே அதன் பிறகு டி.டி.வி. தினகரன் வந்து சசிகலாவை சந்திக்க இயலாது என்பது உறுதியானது?

சசிகலாவை திட்டமிட்டபடி தினகரன் ஏன் சந்தித்து பேசவில்லை என்பதில் மாறுபட்ட கருத்துகள் வெளியாகின. ஆர்.கே.நகர் தொகுதியில் ரூ. 89 கோடி பணப்பட்டுவாடா, இரட்டை இலைச் சின்னத்தைப் பெற ரூ.50 கோடி பேரம் என்று அடுத்தடுத்து சிக்கல்கள் உருவாகியுள்ள நிலையில் சசிகலாவுடனான தினகரன் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று கருதப்பட்டது. இதிலும் தங்களுக்கு எழுந்துள்ள திடீர் எதிர்ப்பை எப்படி எதிர் கொண்டு சமாளிப்பது என்று சசிகலாவும், தினகரனும் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த சில தினங்களாக அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் சசிகலா கடும் அதிருப்தி அடைந்துள்ளாராம்.

ஆட்சியும், கட்சியும் தன் "பிடி"யில் இருந்து நழுவி வருவதால் அவர் மீள முடியாத அதிர்ச்சியில் இருப்பதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக அவர் தினகரனுடனான சந்திப்பை தாமாக தவிர்த்தார் என்று கூறப்படுகிறது.

நேற்று சசிகலாவை சந்திக்க தினகரன் மீண்டும் முயற்சி செய்தார் என்று கூறப்பட்டது. ஆனால் கர்நாடக சிறைத்துறை விதிகளின்படி திங்கள் அல்லது வெள்ளிக் கிழமை மட்டுமே சசிகலாவை சந்திக்க முடியும். செவ்வாய்க் கிழமை சசிகலாவை சந்திக்க வேண்டும் என்றால் சிறைத் துறை டி.ஜி.பியிடம் சிறப்பு அனுமதி பெறவேண்டும். அதனால் சசிகலாவை சந்திக்க தினகரன் எந்த அனுமதியும் பெறவில்லை.

இதனால் அவர் சசிகலாவை சந்திக்கவில்லை. நேற்று அதிகாலை அவர் காரில் சென்னைக்கு திரும்பி வந்தார். (இ-3)

## தி.மு.க.கூட்டியது சுயநலக் கூட்டம்

### பா.ஜ.க.கடும் விசனம்

(சென்னை)

தி.மு.க. கூட்டிய அனைத்து கட்சி கூட்டம் என்பது சுயநலக் கூட்டம் என்றும், பொது மக்களும், விவசாயிகளும் உண்மையை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-3)

# தமிழக விவசாயிகளை பிரதமர் மோடி சாட்டையால் அடிக்கும் போராட்டம்

(டில்லி)

டில்லியில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி போன்று வேடமணிந்த ஒருவர், விவசாயிகளை சாட்டையால் அடிப்பது போன்று சித்திரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

வரட்சி நிவாரணம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய கடன்கள் தள்ளுபடி, நதிகள் இணைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக விவசாயிகள் டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சங்கத்தின் மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் நடைபெறும் இந்த போராட்டம் நேற்று 36 ஆவது நாளாக நீடித்தது. மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் விதமாக விவசாயிகள் தினமும் நூதன முறையில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எலிக் கறி, பாம்புக்கறி உண்ணுதல், மண்சோறு சாப்பிடுதல், மீசை, தாடியை மழித்தல், மொட்டை போடுதல், சேலை அணிதல், தாலி அறுத்தல், முழு நிர்வாணம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தியும் பிரதமர் மோடி ,அவர்களை சந்தித்து பேசவில்லை. இந்த நிலையில் நேற்று பிரதமர் நரேந



திர மோடி போன்று வேடமணிந்த ஒருவர், விவசாயிகளை சாட் டையால் அடிப்பது போன்று சித்திரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் அய்யாக்கண்ணு கூறுகையில், நாங்கள் 24 மணி நேரமும் வீதியிலேயே இருந்து போராடி வருகிறோம். எங்களது கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்க மறுக்கிறது. பல்வேறு நூதன போராட்டங்களையும் நடத்திவிட்டோம் பிரதமர் மோடி எங்களை சாட்டையால் அடிப்பது போன்று போராட்டம் நடத்துகிறோம். இனி மேலும் எங்களை கண்டு கொள்ளாவிட்டால் தூக்கில் தொங்க வேண்டியது தான், வேறு வழியே இல்லை என்றார்.

இந்த சாட்டையால் அடிக்கும் போராட்டத்தின் போது விவசாயி ஒருவர் திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக மற்ற விவசாயிகள் அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து ஆசுவாசப்படுத்தி மயக்கத்தை தெளிய வைத்தனர். கொளுத்தும் வெயிலில் தொடர்ந்து விவசாயிகள் போராடி வருவதால் இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாக அவர்கள் தெரிவித்தனர். (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம், மாதம், வருடம் என்று அணு ஆயுதச் சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தும்

## அந்நாட்டு துணை வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**(பியாங்யாங்)**

**வடகொரியா தொடர்ந்தும் அணு ஆயுதச் சோதனைகளை நடத்தும் என வட கொரிய துணை வெளியுறவு அமைச்சர் ஹங்-சொங் (Han Song-ryol) உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவுடனான இராணுவ அழுத்தங்கள் பெருகி வருகின்றமை தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு நேற்று வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சோதனைகள் வாராந்த, மாதாந்த அல்லது வருடாந்த ரீதியில் மேற்கொள்ளப்படலாம் என குறிப்பிட்ட அவர், வடகொரியாவின் நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் அது மாபெரும் யுத்தத்தை உருவாக்கும் என எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

வடகொரியா அமெரிக்காவை சீண்டிப் பார்க்க கூடாது என துணை ஜனாதிபதி மைக் பென்சும் (Mike Pence) முன்னதாக அறிவித்திருந்தார். வடகொரியாவின் மிலேச்சத்தனமான செய்கைகள் தொடர்பில் அமைதி காத்து வந்த காலம் மாறிவிட்டது எனவும் தெரிவித்திருந்தார்.

வடகொரியாவால் கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட அணு ஆயுத சோதனை தோல்வியில் நிறைவடைந்த சில மணி நேரங்களிலேயே மைக் பென்ஸ் தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டு இவ்வாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 1500 பாலஸ்தீன கைதிகள் இஸ்ரேலில் உண்ணாவிரதம்

(எருசலேம்)

இஸ்ரேல் முழுவதும் உள்ள சிறைகளில் சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற் பட்ட பாலஸ்தீனர்கள் உள்ளனர்.

பொய் வழக்குகளில் அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் சிறைகளில் போதுமான வசதிகள் இல்லை என்றும் நீண்டகாலமாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மார்வன் பர்கோட்டி என்ற பாலஸ்தீன தலைவர் தலைமையில் சுமார் 1500-க்கும் மேற்பட்ட பாலஸ்தீன கைதிகள் நேற்று முன்தினம் முதல் கால வரையறையற்ற உண்ணா விரதத்தை தொடங்கியுள்ளனர். பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸின் அரசியல் வாரிசாக மார்வன் பர்கோட்டி கருதப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 70 மில்லியன் ஆண்டுகள் பழைய டைனோசர் முட்டைகள் கண்டெடுப்பு



(பியூனஸ்ஏர்ஸ்)


ஆர்ஜென்டீனாவில் உள்ள அஃகா மகுவோவின் தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிக்குட்பட்ட பகுதியில் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பட்டகோனியா பகுதிக்கு வடக்கு பிராந்தியத்தில் உள்ள அஃகா மகுவோ தொல்பொருள் ஆராய்ச்சிக்கு பிரபலமான இடத்தில் தான் இந்த முட்டைகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த முட்டைகள் இன்னமும் உயிர்க்கருக்களுடன் தான் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் அளித்த தகவலை அடுத்து. அங்கு சென்று ஆராய்ச்சியாளர்கள். முட்டைகள் உள்ளிட்ட வற்றை மீட்டதாக உள்ளூர் கலாசார பாரம்பரிய பணிப் பாளர் க்ளவுடியா டெல்லா நெக்ரா தகவல் தெரிவித் துள்ளார்.

இதற்கு முன்பாக அஃகா மகுவோ பகுதியில் கடந்த 1997இல் டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தொடர்ந்து டைனோசர் பற்றிய படிமங்கள் மற்றும் முட்டைகள் என கண்டெடுக்கப்படுவதால், அந்த பகுதியை பாதுகாக்கும் விதமாக அங்கு படிம ஆய்வியல் பூங்காவை அமைக்க ஆர்ஜென்டீனா அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளுக்காக அந்த பூங்கா திறக்கப்பட உள்ளதாகவும் நெக்ரா கூறினார். அஃகா மகுவோ பகுதியில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.



மீட்கப்பட்ட முட்டைகள், தோல், பற்கள் என அனைத்தும் உயர் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-3)

## விமானம் விபத்து ஐவர் பலி

(லிஸ்பன்)

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் உள்ள சந்தை வளாகம் அருகே குட்டி விமானம் நேற்று தரையில் விழுந்து நொறுங்கியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

அந்த விமானத்தில் பயணம் செய்த விமானி உட்பட 5 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

விமானம் விழுந்து நொறுங்கியதில் அவரும் காயம் அடைந்தார். பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் பரிதாப மாக உயிரிழந்தார். (இ-3)




## ஏர்துவானுக்கு ட்ரம்ப் வாழ்த்து



(வோஷிங்டன்)

கருத்துக்கணிப்பில் வெற்றிபெற்ற துருக்கி ஜனாதிபதி தையீப் ஏர்துவானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொலை பேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

குறித்த தொலைபேசி உரையாடலின் போது இம் மாதம் 7ஆம் திகதி சிரியாவில் அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கு ஏர்துவான் பாராட்டு தெரிவித்தமைக்கும் ட்ரம்ப் நன்றி தெரிவித்துள்ளார்.

துருக்கியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்துக்கணிப்பில் சுமார் 25 மில்லியன் மக்கள் ஜனாதிபதி தையீப் ஏர்துவானுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என வாக்களித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# உலகப் பிரபலங்களில் மோடிக்கு இடமில்லை

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிக்கு முதலிடம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பிரபல 'டைம்ஸ்' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் உலக பிரபலங்கள் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடிக்கு இடமில்லை.

அமெரிக்காவின் பிரபல 'டைம்ஸ்' பத்திரிகை தனது வாசகர்கள் மூலம் உலகின் பிரபலங்களை தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் பட்டியல் வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பிரபலங்கள் பட்டியல் 'ஒன்லைன்' மூலம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டு வெளியிடப்பட் டது.

இதன் மூலம் உலகின் 100 பிரபலங்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்ட் முதலிடம் பிடித்துள்ளார்.

பிலிப்பைன்சின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஆண்டு [illegible] பேற்றார். அன்று முதல் அங்கு போதைப் பொருள் ஒழிப்பு போரில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் என 8 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பிரசாரத்துக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளார்.

இதன் மூலம் அவர் பிரபலமாகி 'டைம்ஸ்' வாசகர்கள் மத்தியில் பிரபலம் அடைந்துள்ளார். 5 சதவீதம் வாக்குகள் பெற்றுள்ளார்.

அதே நேரத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ரூட்டோ, போப் ஆண்டவர் பிரான்சிஸ், மைக்ரோசொப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ், பேஸ்புக் தலைமை அதிகாரி மார்க் ஷிகர் பெர்க் ஆகியோர் 3 சதவீதம் வாக்குகள் பெற்றுள்ளனர்.


ஆனால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு 2 சதவீத வாக்குகளே கிடைத்தன.

இதற்கிடையே இந்த ஆண்டு உலக பிரபலங்கள் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி இடம் பெறவில்லை. ஏனெனில் இவருக்கு யாரும் வாக்களிக்கவில்லை. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கட்டுப்பாட்டில் அம்பாந்தோட்டை துறைமுகம்

## இருக்க வேண்டுமென ஜப்பான் வலியுறுத்து



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பயன்பாடு, திறந்த மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டியதும், இலங்கை அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியதும், இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு முக்கியமானது என்று இலங்கை- ஜப்பானிய பிரதமர்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 12 ஆம் திகதி ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேயை டோக்கியோவில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

ஜப்பானியப் பயணத்தை முடித்துக் கொண்டு, பிரதமர் கடந்த ஞாயிற்றுக்கிழமை டோக்கியோவில் இருந்து புறப்பட்ட நிலையில், இரண்டு நாடுகளின் தலைவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இலங்கையுடன் கடல்சார் ஒத்துழைப்பை ஜப்பான் வலுப்படுத்த வேண்டும் என்று ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் கடல்சார் பாதுகாப்பு ஆற்றலை வலுப்படுத்தும் வகையில் இரண்டு ரோந்துப் படகுகளை ஜப்பான் வழங்கவுள்ளது.

ஜப்பான்- இலங்கை பாதுகாப்புக் கலந்துரையாடல் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தக் கலந்துரையாடலின் ஊடாக ஏனைய உதவிகள், மேலதிக பாதுகாப்பு பரிமாற்றங்கள் குறித்து தீர்மானிக்கப்படும்.

ஜப்பான்- இந்திய கடலோரக் காவல்படைகள் இணைந்து நடத்தவுள்ள அடுத்த கூட்டுப் பயிற்சியில், இலங்கையை பார்வையாளராக பங்கேற்குமாறு ஜப்பான் அழைப்பு விடுத்துள்ளது என்றும் இந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## ஜி.எஸ்.பி. பிளஸிற்கு முன்

# ரி.ஐ.டி.சட்டத்தை நீக்க வேண்டும்

## ஐரோப்பிய யூனியன் நிபந்தனை

(கொழும்பு)

**ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை வழங்கப்படுவதற்கு முன்னர் நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை (ரி.ஐ.டி.) நீக்குமாறு ஐரோப்பிய யூனியனால் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.**

இந்த விசேட அறிவிப்பு ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைக்குப் பொறுப்பான விசேட பிரதிநிதி கிறிஸ்டோபர் ஜெலின்ஜர் என்ற ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரால் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப் போவதாகக் கூறிய விடயங்களிலும் கரிசனை காட்ட வேண்டும் எனவும் இந்த அறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்திய பின்பே ஜி.எஸ்.பி.பிளஸ் குறித்த முன்னெடுப்புக்கள் பற்றி கருத்தில் கொள்ளப்படும் எனவும் ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

இந்த வரிச் சலுகை எதிர்வரும் மே மாதம் கிடைக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-3)

# அர்ஜூன மகேந்திரனிடம் மீண்டும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், மீண்டும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனிடம் சாட்சிகள் பெற்றுக் கொள்வதற்கு மத்திய வங்கி முறி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புத்தாண்டின் பின்னர் ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

மத்திய வங்கியிலுள்ள இன்னும் இரு அதிகாரிகள் சாட்சிக்காக அழைக்கப்படவுள்ளனர். இவர்களில் ஒருவர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளதனால், முன்னாள் அதிகாரியொருவரிடம் முதலில் சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.



இவர்களிடம் சாட்சிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திந்திரன் அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## யார் இருக்கும் போது என்ன பேசுவது?

ஒரு குடும்பத் தலைவர் தன்னைப் பார்க்க வந்திருந்த நண்பரிடம் தவணைப் பணத்தைச் செலுத்துவதில் எவ்வளவு குறிப்பாக இருக்க வேண்டும் என்று பெரிதாக லெக்சர் அடித்துக் கொண்டிருந்தார்.

உள்ளே நுழைந்த மகன் அப்பா மளிகைக் கடைக்காரர் நாம பாக்கி வைச்சிருக்கோம் என்று திட்டுறாரப்பா என்றவாறு செருப்பை கழற்றிப் போட்டான். அப்பாவின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

நண்பர் புறப்பட்டுப் போனதும் அருகில் அமர்ந்து சொல்லுகிற முறையில் சொல்லியிருக்கலாம்.

கடன் கேட்டு வந்தவரை கையில் பணமில்லையென்று சொல்லித் திருப்பி அனுப்பிக் கொண்டிருப்பார். நிறுவனத்திற்குள் நுழையும் ஊழியர் இந்தாங்க சேர் நீங்க பாங்கில் இருந்து எடுத்திட்டு வரச் சொன்ன 30 ஆயிரம் ரூபா என்று நோட்டுக்களைக் கொட்டுவார். கடன் கேட்டவருக்கும் மறுத்தவருக்கும் எப்படி இருக்கும்?

இப்படி நுழையும் திடீர் கரடிக்குள் உடையவர்களாகக் கேட்கும் வரை காத்திருக்க வேண்டும். மூன்றாமவர் வந்திருக்கும் போது உடையவர்களை தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவது அழகல்ல. இது இங்கிதம் தெரிந்தவர்களின் வேலையுமல்ல.

சிலபேர் சுற்றியிருப்பவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள மாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட சிலரைக் கன்னா பின்னா என்று பேசுவார்கள். ஒரு குறிப்பிட்ட அலுவலகத்தைச் சொல்லி எல்லோரும் அயோக்கிய பசங்க என்பார்கள். பார்த்தால் அந்த அலுவலக ஊழியர் ஒருவரே பக்கத்தில் அமர்ந்திருப்பார். அவர் நல்லவராக இருந்தால் பிரச்சினையில்லை; கெட்டவராக இருந்தால் சண்டைக்கு வருவார். மோசமானவராக இருந்தால் அடிதடியில் இறங்கி விடுவார். இது அவசியம் தானா? கடுமையான விமர்சனங்களைச் செய்யும் போது சுற்றியிருப்பவர்கள் யார் என்பதை உறுதி செய்து கொள்வது நல்லது.

எதிர்மறையாகத் தாக்கிப் பேசுவது மட்டுமல்ல பிடிக்காதவர்களைப் பற்றி ஒருவரிடம் உயர்வாகப் பேசுவதும் தவறே.

சிலபேர் சிறியவர்கள் இருக்கும் போது கெட்ட வார்த்தைகளாகக் கொட்டுவார்கள். இன்னும் சிலர் பெரியவர்கள் இருக்கிறார்களே என்று கூடப் பாராமல் தகாத செயல்கள் பற்றி உரக்கப் பேசுவார்கள்.

ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொள்வது, செய்து வைப்பது என்னும் வெள்ளைக்கார வழக்கம் காரணத்தோடு ஏற்பட்டதுதான். குறைந்தபட்சம் இதுபோன்ற தர்ம சங்கடங்களைத் தவிர்க்கலாம் என்பதே அது.

நம் வயது என்ன? நம் அனுபவம் என்ன? நம் தகுதி வரையறை என்ன? மற்றவர்களின் மனநிலை என்ன? அவர்களது சூழ்நிலை என்ன? என்பதையெல்லாம் கொஞ்சம் கூட எண்ணிப் பார்க்காமல் அதிகமாகப் பேசிக் கொண்டிருந்தால் அது இருக்கிற மரியாதையையும் கெடுத்துக் கொள்வதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இது பண்புடையவர்களுக்கு அழகுமல்ல!


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1. ஆறு ஆடுகள் 3 சாக்குப் புல்லை 3 நாட்களில் தின்று முடிக்குமாயின் ஒரு ஆடு மூன்று சாக்குப் புல்லை தின்று முடிப்பதற்கு.எவ்வளவு நாட்கள் எடுக்கும்?
   1) 3 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 18 நாட்கள்
2. நானும் எனது நண்பிகளும் தீபாவளி வாழ்த்திதழ்களைப் பரிமாறிக் கொண்டோம். இதன் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் மற்றைய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாழ்த்திதழை அனுப்பினோம். நாம் அனைவரும் பயன்படுத்திய மொத்த வாழ்த்திதழ்கள் 30 ஆகும். எனக்கு எத்தனை நண்பிகள் உள்ளனர்?
   1) 5 2) 6 3) 30
3. உட்பக்கம் தெரியாத பையொன்றில் 6 சிவப்புநிறப் பந்துகளும் 3 பச்சை நிறப் பந்துகளும் உள்ளன. அவற்றை பார்க்காமல் ஒரே தடவையில் எடுக்கும் போது ஒரு சிவப்பு நிறப் பந்தினைப் பெற்றுக்கொள்வதற்குப் பையிலிருந்து ஆகக் குறைந்த எண்ணிக்கையாக எத்தனை பந்துகள் வெளியே எடுக்கப்படவேண்டும்.
   1) 2 2) 3 3) 4
4. பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடையின் கீழ் கீறிடுக.



A B C D E

1. C,A,B,D,E 2. A,C,D,B,E 3. C,A,D,B,E

5.



A B C D E

1. A,C,B,D,E 2. C,A,D,B,E 3. E,A,C,D,B

ஒரு சில்லறைக் கடைக்காரரிடம் 5 படிக்கற்கள் மாத்திரம் உள்ளன. அவையாவன:

***1Kg, 500g, 200g, 100g, 50g***

6. கடைக்காரர் 1 kg 750g சீனியை நிறுப்பதற்கு எத்தனை படிக்கற்களைப் பயன்படுத்துவார்?
   1) 3 2) 4 3) 5
7. கடைக்காரர் 450g கருவாட்டை நிறுப்பதற்கு தட்டுத் தராசின் ஒரு பக்கம் 500g படிக்கல்லைப் போட்டார். அவர் பொருளுடன் போட்ட படிக்கல்லின் நிறை யாது?
   1) 110g 2) 200g 3) 50g
8. கடையில் ரூபாய் 16.75 இற்கு கணக்குக்கொப்பி வாங்கி விட்டு 20 ரூபாய்த்தாள் ஒன்றைக் கொடுத்தால் மீதியாக அனைத்தும் 25 சத நாயணங்களாக எத்தனை கிடைக்கும்?
   1) 13 2) 15 3) 17
9. கோலங்களை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 10 | 17 | 24 | 31 | |
| 6 | 11 | | 21 | 26 | 31 |
| 64 | | 16 | 8 | 4 | 2 |

   1) 38, 16, 32 2) 32, 21, 38 3) 30, 24, 38
10. மீன்களை ரின்களில் அடைக்கும் தொழிற்சாலையில் உள்ள இயந்திரம் ஒன்று ஒரு நிமிடத்தில் 60 ரின்கள் வீதம் உற்பத்தி செய்யும். இவ்வியந்திரம் 9 நிமிடங்களில் உற்பத்தி செய்யும் ரின்களின் எண்ணிக்கை யாது?
    1) 480 2) 540 3) 560

அதிபரின் அலுவலகத்தில் இருந்த சில பொருட்களின் நீளமும் அகலமும் தரப்பட்டுள்ளன.

| | பொருள் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| a. | நாட்காட்டி | 20cm | 15cm |
| b. | அஞ்சலுறை | 12cm | 10cm |
| c. | புத்தக மேலட்டை | 15cm | 8cm |
| d. | சிறிய இருக்கை | 36cm | 24cm |

11. நீளங்களின் ஏறுவரிசையில் பொருட்களின் பெயர்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
    1. B,A,C,D 2. B,C,A,D 3. D,A,C,A
12. புத்தக மேலட்டையின் அகலத்துடன் சிறிய இருக்கையின் அகலத்தையும் ஒப்பிட்டால் கூறக்கூடியது யாது?
    1. புத்தக மேலட்டையின் அகலத்தைப்போல் இருமடங்கு அகலம் கூடியது சிறிய இருக்கையின் அகலம்
    2. புத்தக மேலட்டையின் அகலத்தைப்போல் மும்மடங்கு அகலம் கூடியது சிறிய இருக்கையின் அகலம்.
    3. சிறிய இருக்கையின் அகலத்தைப்போல் இருமடங்கு அகலம் கூடியது புத்தக மேலட்டையின் அகலம்.
13. அதிபரின் அலுவலகத்தில் இருந்த நான்கு பொருட்களிலும் நீளம் குறைந்த பொருள் எது?
    1. நாட்காட்டி 2. அஞ்சலுறை 3. புத்தக மேலட்டை
14. அகமட் ஒரு கடைக்காரரிடம் 50 ரூபாய்த்தாள் ஒன்றைக் கொடுத்து இரண்டு புத்தகங்கள் வாங்கினான். கடைக்காரர் அவனுக்கு மீதிப் பணமாக 10 ரூபாய்த் தாள் ஒன்றும் 5 ரூபாய் நாணயங்கள் இரண்டும், 2 ரூபாய் நாணயங்கள் மூன்றும் ஐம்பது சத நாணயம் ஒன்றும், நான்கு இருபத்தைந்து சத நாணயங்களும் வழங்கினார். எனவே அகமட் வாங்கிய ஒரு புத்தகத்தின் விலை யாது?
    1. ரூபாய் 22.50 2. ரூபாய் 11.25 3. ரூபாய் 27.50


பின்வரும் விபரத்தை வாசித்து வினாக்களிற்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| 1 கிலோகிராம் சீனியும் 500 கிராம் தேயிலையும் | ரூ. 175 |
| 1 கிலோகிராம் சீனியும் 400 கிராம் பால்மாவும் | ரூ. 155 |
| 1 கிலோகிராம் சீனி | ரூ. 35 |
| 500 கிராம் தேயிலையும் 1 கிலோகிராம் விசுக்கோத்தும் | ரூ. 220 |

15. 500g தேயிலையின் விலை யாது?
    1. ரூபா 35 2. ரூபா 140 3. ரூபா 120
16. 400g பால்மாவின் விலை யாது?
    1. ரூபா 35 2. ரூபா 140 3. ரூபா 120
17. 500g விசுக்கோத்தின் விலை யாது?
    1. ரூபா 80 2. ரூபா 40 3. ரூபா 20
18. 2Kg சீனியினதும் 1Kg தேயிலையினதும் விலை யாது?
    1. ரூபா 310 2. ரூபா 350 3. ரூபா 380
19. 800g பால்மாவினதும் 500g விசுக்கோத்தினதும் விலை யாது?
    1. ரூபா 380 2. ரூபா 280 3. ரூபா 180
20. 500g விசுக்கோத்தினதும் 400g பால்மாவினதும் விலை யாது?
    1. ரூபா 160 2. ரூபா 200 3. ரூபா 178
21. கீழேயுள்ள சொற்கூட்டங்களில் ஒவ்வொரு சொல்லிலும் ஒவ்வொரு எழுத்தைத் தெரிந்து சேர்ப்பதன் மூலம் கருத்துள்ள ஒரு சொல் உருவாகும். அதனை தெரிவு செய்க.

1. நாளை / குணம் / வயது / பாவம் — 1. நாணம் 2. நாணயம் 3. குயவர்
2. சிலந்தி / வறுமை / கபடம் / தையல் — 1. சிதையல் 2. சிறுபடம் 3. சிறுகதை
3. ஆவணி / பந்தல் / கழித்தல் /துணி — 1. பழித்தல் 2. ஆபத்து 3. வந்து

22. உருவில் வெற்று அடைப்புக்களுக்குப் பொருத்தமான பகுதி எது?



1) 2) 3)

வெவ்வேறு விலைகள்ளயுடைய நான்கு பொதிகள் கீழே உள்ளன. ஒரு பொதியின் விலை மாத்திரம் தனிமையில் தரப்பட்டுள்ளது. மற்றைய மூன்று பொதிகளும் சோடியாகச் சேர்த்து விலைகள் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| பொதி 1<br>பொதி 2 | பொதி 4<br>பொதி 3 | பொதி 1<br>பொதி 4 | பொதி 2 |
| ரூபா 15/- | ரூபா 35/- | ரூபா 20/- | ரூபா 10/- |

23. பொதி 1 இன் விலை யாது?
    1. ரூபா 15/= 2. ரூபா 5/= 3. ரூபா 35/=
24. பொதி 3 இன் விலை யாது?
    1. ரூபா 20/= 2. ரூபா 25/= 3. ரூபா 15/=
25. பொதி 2 உம் பொதி 4 உம் ஒருமித்தால், அச்சோடியின் விலை யாது?
    1. ரூபா 20/= 2. ரூபா 15/= 3. ரூபா 25/=
26. முதலிலுள்ள சொல்லுடன் எந்த வகையிலும் தொடர்பற்ற சொல்லைக் கண்டு பிடித்து அதன் கீழ்க்கீறிடுக.

1. வைத்தியசாலை- 1. நோயாளி 2. ஆசிரியர் 3. வைத்தியர் 4. தாதி
2. புகையிரத நிலையம்- 1. புகைவண்டி 2. தள்ளுவண்டி 3. விமானி 4. சாரதி
3. புத்தகக்கடை- 1. காகிதம் 2. கப்பல் 3. கடதாசி 4. அடிமட்டம்

கீழேயுள்ள விபரங்களை வாசித்து இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியானதா, பிழையானதா இல்லாவிட்டால் கூறமுடியாததா? என்பதைத் தெரிவு செய்க.
எமது பாடசாலை ஆரம்ப மணி அடிப்பதற்கு மாணவ தலைவன் அதிபர் காரியாலயம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அதிபர் காலைக் கூட்டத்தில் ஆற்ற வேண்டிய உரையைத் தயாரித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் வகுப்பறைகள் நோக்கி அவசரமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

27. அதிபர் ஆரம்ப மணியை அடித்தார்.
    1. சரி 2. பிழை 3. கூற முடியாது
28. அன்றைய காலைக் கூட்டத்தில் அதிபர் பேசினார்.
    1. சரி 2. பிழை 3. கூற முடியாது
29. பாடசாலை மணி அதிபர் காரியாலயத்திலேயே உள்ளது.
    1. சரி 2. பிழை 3. கூற முடியாது
30. ஆசிரியர்கள் காலைக் கூட்டத்திற்காக பிரார்த்தனை மண்டபம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.
    1. சரி 2. பிழை 3. கூற முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

நெல் , பாக்கு, பயறு, குரக்கன், பப்பாசி, அவரை, மிளகு, நிலக்கடலை

அடைப்பில் உள்ள வித்துக்களின் பெயர்களை தெரிவுசெய்து வினாக்களுக்கு விடையாக எழுதுக.

31. இத்தானியத்தை அரைத்து மாவாக்கி அதனால் பிட்டு, ரொட்டி, இடியப்பம், பாண் போன்ற உணவு வகைகள் செய்வார்கள். இது நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் உகந்தது. இதனைப் பயன்படுத்தி செய்யப்படும் உணவுகள் யாவும் கறுப்பு நிறமாகவே இருக்கும். அது எது?

........................................................

32. மீண்டும் இதே வகைத் தாவரத்தை பெறுவதற்காக இவ்வித்தை காய வைத்துப் பாதுகாப்பார்கள். இவ்வித்துக்களை மிளகு வியாபாரிகள் கலப்படப்பொருளாகவும் பயன்படுத்துவார்கள். இதனால் உண்டாகும் தாவரத்தின் கனி உணவுச் சமிபாட்டுக்கும் மிகவும் உகந்தது. அது எது?

........................................................

33. நிலத்துக்கு கீழ் விளையும் இவ்வித்து பொரித்து, அவித்து, வறுத்து உண்ணலாம். இவ்வித்துக்களிலிருந்து எண்ணெய்யும் பெறலாம். இந்துக் கோயில்களின் வாசலில் விற்பனைக்கு வைத்திருப்பார்கள். அது எது?

........................................................

**துண்டுப்பிரசுரம்**

**விழித்தெழுவீர்!**
**சூழலைப் பாதுகாப்போம்!**
**சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகள்**

- காடுகளை அழிப்பதை தடை செய்ய வேண்டும்
- வீட்டுக்கு இரண்டு மரங்களை வளர்க்க வேண்டும்.
- நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளை நகரங்களில் இருந்து வெளியே வைத்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.
- தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் தீங்கு விளைவிக்கும் புகை மற்றும் இரசாயனத்தைக் குறைக்க வேண்டும்.
- வீடுகளில் உள்ள குப்பைகளை உரிய இடத்தில் போட வேண்டும்.
- வீட்டைச் சுற்றியுள்ள கழிவுக் கால்வாய்களை மூடி வைக்க வேண்டும்.
- தொழிற்சாலைகளில் இருந்து வரும் இரசாயனக் கழிவுகள் நீர் நிலைகளில் சேருவதற்கு தடை விதிக்க வேண்டும்.

- சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்பு -

இத்துண்டுப் பிரசுரத்தில் நீங்கள் வாசித்தறிந்த விடயங்களை உங்கள் சொந்த மொழிநடையில் நான்கு வாக்கியங்களாக எழுதுக.

34........................................................
35........................................................
36........................................................
37........................................................

வினாவில் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தில் உள்ள தவறை விபரிக்கும் வாக்கியத்தின் கீழ்க் கீறிடுக.

38. தெருவில் சென்ற புகையிரதம் சிவப்புக்கொடி காட்ட நின்றது.
   1. சிவப்புக் கொடி ஆபத்தை குறித்ததால் நின்றது.
   2. தெருவில் புகையிரதம் செல்லாது.
   3. புகையிரதத்தை நிறுத்த முடியாது.
   4. மேலுள்ள அனைத்தும் தவறானது.

39. ஆகாயத்தில் பறந்த பட்டத்துடன் காகம் சண்டை இட்டது.
   1. பட்டத்துக்கு உயிரில்லை. 2. காகத்திற்கு உயிரில்லை.
   3. பட்டம் பறக்காது. 4. மேலுள்ள அனைத்தும் தவறானது.


40. புளிய மரத்தில் காய்த்திருந்த மாம்பழம் புளிப்பாக இருந்தது.
   1. புளிய மரத்தின் காய் புளிப்பானது 2. புளிய மரத்தின் மாங்காய் புளிக்காது.
   3. புளிய மரத்தில் மாங்காய் காய்க்காது 4. மேலுள்ள அனைத்தும் தவறானது

**19-04-2017 புதன் இன்று வெளியாகியுள்ள வினாத்தாளின் விடைகள்**


| | | | |
|---|---|---|---|
| 01) 3 | 11) 2 | 21) 2, 3, 2 | 33) நிலக்கடலை |
| 02) 1 | 12) 2 | 22) 1 | 34) - 37) வரை |
| 03) 3 | 13) 2 | 23) 2 | சரியான வாக்கியங்கள் |
| 04) 3 | 14) 2 | 24) 1 | 38) 2 |
| 05) 2 | 15) 2 | 25) 3 | 39) 1 |
| 06) 3 | 16) 3 | 26) 2, 3, 2 | 40) 3 |
| 07) 3 | 17) 2 | 27) 2 | |
| 08) 1 | 18) 2 | 28) 1 | |
| 09) 1 | 19) 2 | 29) 1 | |
| 10) 2 | 20) 1 | 30) 3 | |
| | | 31) குரக்கன் | |
| | | 32) பப்பாசி | |

## மாதிரி வினாத்தாள் பகுதி-1

தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு ஒத்தவை. அந்த இரண்டு உருக்களும் யாவை?


1.

A B C

1. A யும் B யும்
2. A யும் C யும்
3. B யும் C யும்

2.

X Y Z

1. X உம் Y யும்
2. X உம் Z உம்
3. Y யும் Z உம்

கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

3.


4. K, L, M, N, K, L, M, N, K, L, M, ......... K , L ........; N, K, L, M,N.
1. L , N 2. N , M 3. M , N

5) 3 , 4 , 2 , 6 , 3 , 4 , 2 , 6 , 3 , 4 ........... 6 , 3 , 4 ............ 6 , 3 , 4 , 3 , 6
1) 4, 2 2) 4, 6 3) 2, 2

கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்கள் எவை.

6) 7, 10, 13, 15, 16, 19, 22, 23, 25
   1) 15 உம் 22 உம் 2) 15 உம் 23 உம் 3) 16 உம் 18 உம்

7) 1, 3, 6, 10, 13, 15, 18, 21, 28, 36
   1) 28 உம் 36 உம் 2) 13 உம் 15 உம் 3) 13 உம் 18 உம்

8. தரப்பட்டுள்ளவற்றிடையே நான்கு பேரை ஒரு கூட்டமாகவும் மூன்று பேரை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் மூன்று பேர் இருக்கும் கூட்டத்திற்கு உரியது எது?

தசரதன், கர்ணன், கைகேயி, கூனி, கும்பகர்ணன், இராமன், ஏகலைவன்

   1. தசரதன், கைகேயி, இராமன் 2. கர்ணன், கும்பகர்ணன், ஏகலைவன்
   3. கைகேயி, கூனி, கர்ணன்

9. தரப்பட்டுள்ளவற்றிடையே நான்கு சொற்கள் ஒரு கூட்டமாகவும் மூன்று சொற்கள் வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் நான்கு சொற்கள் இருக்கும் கூட்டத்திற்கு உரியது எது?

மன்னன், வந்தான், தசரதன், கழிந்தன, செய்தான், அவள், பாட்டன்

   1. தசரதன், பாட்டன், மன்னன், அவள். 2. வந்தான், செய்தான், கழிந்தன, அவள்.
   3. தச்ரதன், வந்தான், மன்னன், கழிந்தன.

கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

ஓவியம் தருவாய் சிற்பம்
உணர்விப்பாய் கவிதையூட்டக்
காவியம் தருவாய் மக்கள்
கலகலவெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்

10. இப்பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது?
   1. பத்திரிகை 2. ஓவியம் 3. சிற்பம்

11. ஓவியம் வரைவது அதேபோல் சிற்பம்
   1. செதுக்குவது 2. கீறுவது 3. பாடுவது

12. பாடலில் உள்ள இரட்டைக்கிளவிச் சொல் எது?
   1. விகடம் 2. கவிதையூட்ட 3. கலகல

13. சிரிப்பூட்டும் வேடிக்கையான பேச்சைக்குறிப்பிடும் சொல் எது?
   1. விகடம் 2. மேவிடும் 3. காவியம்

14. முப்பத்திரண்டாயிரத்து முந்நூற்று ஆறு என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?
   1. 60332 2. 60323 3. 30326

15. ஒரு கடிகாரத்தில் மாலை 6 மணியைக் காட்டும் போது மணிமுள், நிமிடமுள் குறித்து நிற்கும் இலக்கங்களுக்கு இடையிலான சரியான தொடர்பு எது?
   1. நிமிடமுள் காட்டுவதன் இருமடங்கை மணிமுள் காட்டும்.
   2. மணிமுள் காட்டுவதன் இருமடங்கை நிமிடமுள் காட்டும்.
   3. நிமிடமுள், மணிமுள் இரண்டும் ஒரே இலக்கத்தைக் காட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் கான்ஸ்டபிளிடம் ரூ.24ஆயிரம் பணமோசடி

புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர் சிலாபம் பொலிஸில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவரிடம் 24 ஆயிரம் ரூபா வரை பண மோசடி செய்துள்ளார்.

தமக்கு அவசர தேவையாக பணம் வேண்டும் எனவும், ஈஸி கேஷ் முறையில் தமக்கு பணத்தை அனுப்புமாறும் தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் கோரியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக சிலாபம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.40 அளவில் சிலாபம் நகரில் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அழைப்பை ஏற்படுத்தியவர் தம்மை புத்தளம் பிரதி பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார்.

அத்துடன், குறித்த தொலைபேசி அழைப்பின் போதே பிரதி பொலிஸ்மா அதிபராக அடையாளப்படுத்திக் கொண்ட பிறிதொருவரும் பேசியுள்ளார்.

தனது தனிப்பட்ட உதவியாளரின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

தம்மால் குறிப்பிடப்படும் ஒரு தொலைபேசி எண்ணுக்கு 24,000 ரூபாவை ஈஷி கேஷ் மூலம் வைப்பிலிடுமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் சில மணித்தியாலங்களின் பின்னர் சிலாபம் ஊடாக கொழும்பு செல்லவிருப்பதால் அந்த பணத்தை மீளத் தருவதாக அந்த தொலைபேசி அழைப்பில் பேசியவர் உறுதியளித்துள்ளார்.

இதனையடுத்து சிலாபத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் 9000 மற்றும் 15 000 என இரண்டு இடங்களில் ஈஷி கேஷ் மூலமாக பணப் பரிமாற்றம் செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து குறித்த தொலைபேசி எண்ணில் இருந்து எந்தவொரு தொலைபேசி அழைப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் சிலாபம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏற்கனவே, பல தடவைகள் உயர் பொலிஸ் அதிகாரியாக தம்மைக் காட்டிக் கொண்டு ஒரு மோசடி குழுவினர் பணம் கோரி வந்துள்ளமை தெரியவந்துள்ளது. (இ-3)

# அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆகக்கூடிய வருமானம்


தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 7 இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளது.

இதேவேளை ஆகக்கூடிய வருமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெறப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் நடவடிக்கை முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஓப்பநாயக்க தெரிவித்தார்.

இந்த வருமானம் 21.5 மில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. அன்றையதினம் 71ஆயிரத்து 500 வாகனங்கள் இந்த வீதியினூடாக பயணித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் 230 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டதாகவும் இந்த வருமானம் கடந்தவருட பண்டிகைக்கால வருமானத்திலும் பார்க்க 25 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-3)

# வியட்நாமில் ரணில் அஞ்சலி



(கொழும்பு)

வியட்நாமுக்கான விஜயத்தில் ஈடுபட்டுள்ள பிரதமர் ரணில்விக்கிரமசிங்க வியட்நாம் பிரதமர் குயேன் பூ உட்பட அந்நாட்டு அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வியட்நாம் குடியரசின் தேசிய வீரர்கள் நினைவு தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினார். (இ-7)

# அகில இலங்கை இந்து மாமன்ற கவிதைப் போட்டியின் முடிவுகள்

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த 2016 தீபாவளி திருநாளை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்திய மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்னும் தொனிப்பொருளிலான கவிதைப் போட்டியின் முடிவுகள்.

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - தீபிகா மகேந்திரன் (தரம் : 7 - யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - சித்திரவேல் நதீஷா (தரம் : 8 - மா/ பாக்கியம் தேசிய கல்லூரி - மாத்தளை), மூன்றாம் இடம் - கயாநிதி கற்கண்டு (தரம் : 8 - யா/புற்றளை மகா வித்தியாலயம்). ஆறுதல் பரிசுகள் : ரி. விலாசினி (தரம் 8 - மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை), கலாறஞ்சன் ஜனனி (யாழ்.நடேஸ்வராக் கல்லூரி), றோகன் ராஜ் கிருஷ்ணா (மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை)

மத்தியபிரிவு

முதலாம் இடம் - நா.விஜித்தா (தரம்:10 - யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை - சுழிபுரம்), இரண்டாம் இடம் - மகேசன் விஜித்தா (தரம்: 9-யா/புற்றளை மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம் - சுமேதா மணிவண்ணன் (தரம் : 9 - மட்/ வின்சென்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை). ஆறுதல் பரிசுகள் : பா.சங்கீத்தா (தரம் : 9 - யாழ். கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் - நீர்வேலி), கே.கலைவாணி (தரம் : 9 - மமா/ ஹவ/ கவரவில தமிழ் மகா வித்தியாலயம்), க.ப்ரிந்திகா (தரம் 9 - மு/ முல்லைத்தீவு றோ.க.த.க.பாடசாலை).

மேற்பிரிவு

முதலாம் இடம் - தர்ஷாயினி ஜெகதாஸ் (தரம் : 13 - யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - செ.சேதுசன் (தரம் : 12 - வ/ புதுக்குளம் மகா வித்தியாலயம் - வவுனியா.), மூன்றாம் இடம் - விஸ்ணுகா விக்னேஸ்வரன் (தரம் : 13 - யா/ இணுவில் மத்திய கல்லூரி). ஆறுதல் பரிசுகள் : நாகேந்திரராஜா தக்ஷாலினி (தரம் 12 - மாத்/ பாக்கியம் தேசிய கல்லூரி - மாத்தளை), ராஜேந்திரன் சிவதர்ஷிகா (தரம் 13 - மாத்/ பாக்கியம் தேசிய கல்லூரி - மாத்தளை), துரைசிங்கம் சுபாசினி ( உயர்தரம் - யா/இராமநாதன் கல்லூரி). (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1048

Search for people, places and things | Nagendram Home

நீரு




பபிதன்




மதன்




சுகுணா




ஆரணி




மிதுலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுர மாவட்டத்தில் தமிழர்கள்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

அநுராதபுர மாவட்டம், அநுராதபுர நகரம் ஆகிய இரண்டும் இலங்கையின் ஆரம்பகால நாகரிக வளர்ச்சியில் மிக முக்கிய இடத் திணைப் பெற்றுள்ளன. இன்றைய அநுராதபுர மாவட்டம் ரஜரட்டைப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகும். அநுராதபுர மாவட்டம் கி.மு 5ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி 11 ஆம் நூற்றாண்டுவரை ரஜரட்டை இராச தானியின் தலைநகராக திகழ்ந்தது.இங்கு 100 க்கு மேற்பட்ட சிங்கள அரசர்கள் ஆட்சி செய்தார்கள் என்றும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங் கள் மற்றும் பௌத்த விகாரைகள், வணக்கத்தலங்கள், அரச மாளிகை கள் அமைக்கப்பெற்றன.




இவைகள் நீண்டகாலமாக அழிவுக்குட் பட்டு இருந்துபின்னர் சில புனருத்தார ணம் செய்யப்பட்டுள்ளன. இன்று ஐக்கியநாடுகளில் யுனெஸ்கோ நிறுவனம் அநுராதபுரப்பகுதியில் காணப்படும் வரலாற்று முக்கியத் துவம் பெற்ற சின்னங்களை கலா சார மரவுரிமை சின்னங்களாக பிரகடனப்படுத்தியுள்ளது.

அநுராதபுரத்தில் எட்டு முக்கிய வணக்கத்தலங்கள் அமையப் பெற்றுள்ளன.அவையாவன ஸ்ரீ மகா போதி, ருவன்வலி சாயா, தூபராம, லோவமகா பாயா, அபயகிரி, டகோபா, ஜெத்தவனராமய, மிரிஸ்வத்த தூபி, லங்காராமா என்பனவா கும். மேற்குறிப்பிட்ட முக்கிய தலங் களை விட வேறும் முக்கிய இடங்கள் இருக்கின்றன. இசுறு முனிய, மகுல் உயன, வெசகிரி இரத்தின பிரசாதய, இராணி மாளிகை, தக்கன தூபி, நாக விகாரை, கிரிபத் விகாரை குட்டம் பொக்கணை, ருறுவில சிலை, சமாதிநிலை ரண்பாசு, உயன போன்றன நகரின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. இதுபோல ரஜரட்டை பிரதேசத்தில் காணப்படும் குளங்களும் நீர்ப்பாசன கட்டமைப்புகள், நிர்வாக முறைகள் இப் பிரதேசத்தின் அன்றைய வளர்ச்சியை காட்டுகின்றன.

அநுராதபுரமும் ரஜரட்டை பிரதேசமும் சிங்கள மக்களின் வரலாற்று முக்கிய பிரதேசமாகவும் நகராகவும் இருந்தது. எனினும் அநுராதபுரத்தில் சில காலங்களில் ஆட்சிசெய்திருந்ததுடன் நகரின் செயற்பாட்டில் ஆரம்ப காலத்திலிருந்து தமிழர்களும் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது வரலாற்று 11 ஆம் நூற்றாண் டின் பின் இப்பிரதேசமும் நகரமும் அழிவுக்குட்பட்டு காட்டுப் பிரதேசமாக மாறியது.

18 ஆம் நூற்றாண்டில் கண்டி இராச்சியத்தில் கைதியாக இருந்த றோபேட் நொக்ஸ்சின் அறிக்கையின்படி அழிவுற்ற காலத்திலும் அநுராபுர நகரில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர் எனத் தெரிய வருகின்றது.

அட்டவணை I

| ஆண்டு | மாவட்ட குடித்தொகை | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | தமிழர் | வீதம் |
|---|---|---|---|---|---|
| 1963 | 279120 | 6940 | 1680 | 8620 | 3.09 |
| 1971 | 389207 | 8772 | 3139 | 11911 | 3.06 |
| 1981 | 587822 | 7113 | 785 | 7898 | 1.34 |
| 2001 | 744466 | 5063 | 517 | 5581 | 0.75 |
| 2012 | 860575 | 4733 | 516 | 5250 | 0.61 |

மூலம்: இலங்கைக் குடிக் கணிப்புகள்

1833 ஆம் ஆண்டு கோல்புறூக் இலங்கையை ஐந்து மாகாணங்களாப் பிரித்த பொழுது நுவர கலாவியப் பகுதியை வட மாகாணத் தின் ஒருபகுதியாக உள்ளடக்கி னார். பின்னர் 1873 இல் நுவரகலாவியா, குருளு, காலவேவா, தம்பன்கடவை ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு வட மத்திய மாகாணம் உருவாக்கப் பட்டது.

1873 இல் இருந்து 1955 ஆம் ஆண்டுவரை இம் மாகாணத்தில் அநுராதபுர மாவட்டமே இருந்தது. 1955 இல் அநுராதபுர , பொலநறுவை மாவட்டங்களாக வட மேல் மாகாணம் பிரிக்கப்பட்டது.

அட்டவணை I இல் அநுராதபுர மாவட்டத்தின் குடித்தொகையும் இலங்கைத்தமிழர், இந்தியத் தமிழர் மற்றும் தமிழர் தொகை விபரங்கள் தரப்பட்டுள்ளன.

1921ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தில் 11737 தமிழர்கள் இருந்துள்ளார்கள்.இவர்களுள் இலங்கைத் தமிழர்கள் 6182 பேர், இந்தியத் தமிழர் 4555 பேராகும். 1921இல் மாகாணத்தின் குடித் தொகையில் தமிழர் விகிதம் 11.12%மாக இருந்தது. 1946இல் மாகாணத்தின் மொத்த தமிழர் எண்ணிக்கை 12 401 பேராக இருந்தது. இதில் இலங்கைத் தமிழர் 9304 பேராகவும் இந்தியத் தமிழர் 3097 பேராகவும் இருந்தது. தமிழர் விகிதாசாரம் 8.09%மாக இருந்தது. 1956இல் இலங்கைத் தமிழர் விகிதம் இம் மாகாணத்தில் 6% மாகக் குறைந் தது.

அநுராதபுர மாவட்டம் 1955 இல் புதிய பரப்பளவுடன் உருவாகியது. 1963 இல் இம் மாவட்டத்தின் குடித் தொகையில் தமிழர் 3.09% மாக இருந்தனர். பின்னர் 1971இல் மாவட்டத்தில் தமிழர் விகிதம் 3.06% மாகக் குறைந்தது.

## மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகள்




மேலும் 1981 மாவட்டத்தில் தமிழர் விகிதம் 1.34% மாகக் குறைந்து பின்னர் 2001இல் தமிழர் விகிதம் 0.75%மாகக் குறை ந்து 2012 இல் மேலும் குறைந்து 0.61% மாக வந்தது. தற்பொழுது தமிழர்கள் தொகையும் விகிதமும் மேலும் வீழ்ச்சி பெற்றிருக்கின்ற தெனலாம்.

அட்டவணை II இல் அநுராதபுர மாவட்ட குடித்தொகை, தமிழர், இல ங்கை சோனகர் குடித் தொகை விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

| பிரதேசப்பிரிவு | பிரதேச குடித்தொகை | தமிழர் குடித்தொகை | இலங்கைச் சோனகர் |
|---|---|---|---|
| கெப்பற்றிக் கொல்லாவ | 22325 | 94 | 2085 |
| மதவாச்சிய | 46906 | 298 | 2947 |
| மகாவிலாச்சிய | 22467 | 43 | 04 |
| நுவரகம்பலாத்த மத்தி | 61223 | 900 | 5235 |
| ரம்வேவா | 36782 | 59 | 5655 |
| ககட்டுஸ்கிலிய | 40339 | 190 | 8169 |
| ஹொறப்பத்தானை | 36990 | 104 | 9882 |
| கல்வெனடுனுவேவா | 46992 | 225 | 1381 |
| மிகந்தலை | 35293 | 116 | 1613 |
| நுவரகல்பலாத் கிழக்கு | 69737 | 537 | 2950 |
| நொச்சியாகம | 49886 | 299 | 1980 |
| இராயாங்கன | 33543 | 13 | - |
| தம்புத்தேகம | 42437 | 30 | 04 |
| தளாவ | 57793 | 116 | 630 |
| திறப்பன | 27044 | 76 | 1650 |
| கெக்கிராவ் | 50241 | 1647 | 10906 |
| பலுகஸவேவா | 15582 | 164 | 16 |
| இப்பலோககம | 38862 | 217 | 5339 |
| கல்னெவா | 34756 | 101 | 2280 |
| பலகல | 34002 | 125 | 4773 |
| பதவியா | 22998 | 14 | |

மூலம் : இலங்கை குடித்தொகைக் கணிப்புகள்

பிரதேச பிரிவுகள் அடிப்படையில் 2012ஆம் ஆண்டுக்குரிய தமிழர் குடித்தொகையும் சோனகர் மக்களின் குடித் தொகையும் காட்டப்பட்டுள்ளன.

அநுராத மாவட்ட மொத்த தொகையில் இலங்கை சோனக மக்கள் 70 653 பேர் இருப்பதுடன் இவர்களின் விகிதாசாரம் 8.1%மாகவுள்ளது.

இம் மாவட்டத்தில் இருந்து பாராளு மன்றத்துக்கு ஒரு முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் மாகாண சபை மாநகர சபை பிரதேச சபைகள் பலவற்றில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பல முஸ்லிம் பிரதிநிதிகள் இருக்கின்றன.

அநுராதபுர மாவட்டத்தில் பல முஸ்லிம் விவசாயக் கிராமங் கள் இருப்பதுடன் முஸ்லிம் பாட சாலைகளைக் கொண் டும் இருக்கின்றன.

மிகப் பெரும் பான்மையான மாவட்ட முஸ் லிம் மாணவர்கள் தமிழ்மொழி யில் கற்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் முஸ்லிம் மாணவர்கள் இம் மாவட்ட த்திலிருந்து குறிப்பாக கலை, வர்த்தகப் பிரிவுகளில் தமிழ் மொழி மூலம் கற்று பல்கலைக்கழகங்களுக்கு எடுபடுவது மகிழ்ச்சி யைத் தருகின்றது.

அநுராதபுரம், வடமாகாணத்திற்கு அருகில் இருந்தும் தமிழர் மிகக் குறைவாக இருப்பது மிகவும் கவலை தருவதாக இருக்கின்றது.

வடமத்திய மாகாணத்தில் கடந்தபல ஆண் டுகளாக ஏற்பட்ட அபிவிருத்தி யால் மேம்பாட்டால் தமிழ் மக்கள் யாதொரு நன்மை யும் பெற வில்லை என்பது தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீதோட்டமுல்ல குப்பையை அகற்றுவதற்கு ரூ.10 பில்லியனை மகிந்த ஒதுக்கியிருந்தார்

(கொழும்பு)

கொழும்பு நகரத்தில் அன்றாடம் சேரும் திண்மக் கழிவுகளை மாற்றுவதற்கும், கொலன்னாவை, மீதோட்டமுல்ல குப்பையை அகற்றுவதற்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது ஆட்சிக் காலத்தின்போது 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தார் என தகவல் வெளியாகியுள்ளது.

புத்தளம் அருவாக்காலு பிரதேசத்துக்கே, குப்பைகளை மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கான அமைச்சரவை பத்திரம் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சராக இருந்த அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு 2014 ஒகஸ்ட் 14 ஆம் திகதியன்றே அனுமதி கிடைத்துள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அலுவலக இணையத்தளத்திலேயே இந்தச் செய்தி வெளியாகியுள்ளது. அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கொழும்பு தலைநகரத்துக்கு அண்மைய பிரதேசங்களில் சேரும் நகரக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக சுற்றாடல் ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பொருளாதார ரீதியில் செயற்படுத்தக் கூடியதுமான தீர்வொன்று பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பு நகரத்தில் சேர்க்கப்படும் நாளாந்த நகர திண்மக் கழிவுகள் சுமார் 700 மெற்றிக்தொன் என அளவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தலைநகரப் பிரதேசத்தின் நகரமயமாக்கப்பட்ட ஏனைய உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் அவ்வாறு சேரும் நகரத் திண்மக் கழிவுகளுடன் எடுக்கும் போது, நாளொன்றுக்கு சுமார் 1,200 மெற்றிக்தொன் கழிவுகள் சேரும்.

புத்தளம் மாவட்டத்தின் அருவாக்காடு பிரதேசத்தில் துப்புரவேற்பாட்டு கழிவுப் பொருட்களை இடும் இடமொன்றை நிர்மாணித்து, இக்குப்பைகள் அகற்றப்படும்.

இதேவேளை, கொலன்னாவை, மீதோட்டமுல்ல இடமாற்ற நிலையத்திலிருந்து திண்மக் கழிவுகளை ரயிலின் மூலம் கொண்டு செல்வதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

பிரேரிக்கப்பட்டுள்ள துப்புரவேற்பாட்டுக் கழிவுத் தடுப்பு சர்வதேச தரத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

ரயில்வேத் திணைக்களத்தினால், அவ்விடத்துக்கு செல்வதற்கான நிர்மாணிப்பு திட்டங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, திறந்த ரயில் பெட்டிகள், ரயில் இயந்திரங்கள் தொடர்பிலும் கூட கட்டளை விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த செலவு 107 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். (இலங்கை ரூபாய் 10 பில்லியன்). இது தொடர்பிலான தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் அவ்வமைச்சுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. (இ-3)

# அரசு அவசரகால நிலையை பிரகடனப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் இன்புளுவென்சா தொற்று வேகமாக பரவி வருகின்ற நிலையில் அதனைக் கருத்திற்கொண்டு அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தவறிவிட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்ஸா இந்தக். குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

குறித்த வைரஸ் தொற்றினால் பலர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஏனைய விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் சுகாதார அமைச்சர் என்ற வகையில் ராஜித சேனாரட்ன, இந்த நிலைமை குறித்து கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. எனவே தட்டுப்பாடு நிலவுகிற வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகளை உடனடியாக அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# வெளிநாட்டுப் பிரஜை உள்ளிட்ட இருவர் விபத்தில் உயிரிழப்பு

அக்கரைப்பற்று பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இந்தியப் பிரஜை உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ளனர்.

அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறி சுவரொன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த 45 வயது இந்தியர் ஒருவரும் 24 வயது இளைஞரும் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பலியாகியுள்ளனர்.

சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# நிவாரணப் பணி தொடர்கிறது

மீதோட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததால் ஏற்பட்ட அனர்த்தத்தை தொடர்ந்து மக்களை காப்பற்றி நிவாரணம் வழங்கும் நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது.



குறித்த பணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர், விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாளர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 14 ஆம் திகதி மீதோட்டமுல்ல குப்பை மேட்டின் ஒரு பகுதி சரிந்து விழுந்ததில் பல வீடுகள் சேதமடைந்திருந்தன.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் சுமார் 1050 இற்கு மேற்பட்ட பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டு வரும் இதேவேளை 15 மண் அகழ்வு இயந்திரங்களும் 15 குப்பைகள் அகழ்வு டிரக் வண்டிகளும் குறித்த பகுதியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட வலயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட அதிரடிப் ப்டையினர் மற்றும் பொலிஸார் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் காணாமல் போனோரை கண்டுபிடிக்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறுவதாகவும் இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களின் 30 உடல்கள் இதுவரையில் மீட்புப்பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு படையினரின் உதவியுடன் பிரதேச செயலாளர் தலைமையிலான அரச அதிகாரிகள் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக மதிப்பீடு மற்றும் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சட்டவிரோத சிகரெட்டுடன் வெளிநாட்டுப் பிரஜை கைது

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் வெலிகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய வெலிகம - பெலெண கடற்பகுதியில் வைத்து இவர் கைதாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் வசம் இருந்து தலா 20 சிகரெட்டுக்கள் அடங்கிய 10 பக்கெற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர் உக்ரைன் நாட்டுப் பிரஜை எனத் தெரியவந்துள்ளது.

அவரை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விமர்சனத்துக்குள்ளான விமலின் உண்ணாவிரதம்



தேசிய சுதந்திர முன்னணியின் தீர்மான மிக்க அரசியல் குழு கூட்டம் இன்று 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அந்தக் கட்சியின் உள்ளக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தக் கட்சியின் அரசியல் குழுவைச் சேர்ந்த 17 பேர் கொண்டவர்களே இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

விமல் வீரவன்ச தனக்கு பிணை வழங்க வேண்டும் எனக் கோரி விளக்கமறியலினுள் உண்ணாவிரதம் இருந்தமை மற்றும் அதனை முடித்துக் கொண்டமை தொடர்பில் அந்தக் கட்சியின் அரசியல் குழவின் பெரும்பான்மையினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்த செயலினால் கட்சிக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. இந்தக் கட்சி மக்கள் மத்தியில் நகைச் சுவைக்கு உள்ளாகியுள்ளது என்பது அந்தக் கட்சியின் பிரதான செயலாளர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களின் கருத்தாகும்.

விமல் வீரவன்ச உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்சியில் இது தொடர்பில் அறிவிக்கவில்லை எனவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

விமல் பிணையில் வெளியே வந்து வீட்டிற்கு சென்றதன் பின்னர் இது வரையில் அமைதியாக இருப்பதனால் கட்சியின் அரசியல் குழுவுக்குள் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமையில் இன்று 19ஆம் திகதி இடம் பெறவுள்ள அரசியல் கூட்டம், அந்தக் கட்சியின் தலைவரான விமல் வீரவன்சவின் அரசியல் எதிர்காலத்திற்கும் இந்தக் கட்சியை தொடர்ந்து முன்னெடுத்து செல்வது தொடர்பிலும் தீர்மானமிக்கதாக அமையும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விமல் வீரவன்சவின் அரசியல் செயற்பாடு முன்னாள் ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிர்க்கட்சி தலைவர் தினேஷ் குணவர்த்தனவின் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# பிரதமருக்கும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளருக்கும் இடையில் பேச்சு

வியட்நாம் மற்றும் இலங்கைக்கிடையிலான இருதரப்பு தொடர்புகளை உறுதி செய்வதுடன் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையிலான நட்புறவை வலுவூட்டுவதற்கு திட்டமிட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என்று வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் குயன் பூ ரோன்ங் (Nguyen Phu Trong) தெரிவித்துள்ளார்.

ஹெனொய் நகரில் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

வியட்நாம் புரட்சியின் போது இலங்கை அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பிற்கு தாம் எப்பொழுதும் நன்றி தெரிவிப்பதாக அவர் இதன் போது தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் சரியான வழியில் செயற்பட்டு அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடுகள் குறித்தும் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பாராட்டுத் தெரிவித்தார். (இ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவி மக்களின் மரணத்திற்கு அரசியல்வாதிகள் தான் பொறுப்பு

## முதலமைச்சர் இசுரு குற்றச்சாட்டு

(கொழும்பு)

மீதோட்டமுல்ல அனர்த்தத்தில் அப்பாவி மக்கள் உயிரிழந்தமைக்கு அரசியல்வாதிகளே பொறுப்புக் கூற வேண்டும் என்று மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு கயிறிழுப்பு செய்ததன் காரணமாகவே அனர்த்தம் நிகழ்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.



மீதோட்டமுல்ல குப்பைகளுக்கு விசேட செயற்றிட்டமொன்றின் மூலம் தீர்வு காண, நாம் கடந்த காலத்தில் இங்கிலாந்திலிருந்து ஒரு நிறுவனத்தை முதலீடு செய்யுமாறு அழைத்து வந்தோம் எனவும், அவர்களுக்கு அன்றிருந்த அரசியல்வாதிகள் அனுமதி அளித்திருந்தால் இன்று இந்த உயிரிழப்பை சந்தித்திருக்க மாட்டோம் என மேல் மாகாண முதலமைச்சர் கூறினார்.


"கடந்த வருடம் மே மாதம் ஆரம்பிக்கவிருந்த மீதோட்டமுல்ல குப்பை முகாமைத்துவ நடவடிக்கையை மேற்கொள்ள தேவையான இயந்திரங்களை பொருத்துவதற்கு குப்பை மேடு உள்ள இடத்தில் 60 பேர்ச்சர்ஸ் இடத்தை பெற்றுத் தருமாறு கேட்டோம்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதிய போதிலும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த குப்பை மேடு தொடர்பில் கயிறிழுத்தவர்கள் மாகாண முதலமைச்சர்கள் அல்லர். அமைச்சர்களே ஆவர்.

இந்த குப்பை மேட்டுக்கு மக்கள் அடிபட்டு மரணத்தை சந்திப்பதற்கு மாகாண சபையின் தவறு காரணமல்ல. மாறாக செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த இடம்தர மறுத்தவர்களே காரணம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# புத்தளம் சாலியவெவயில் மனித எச்சங்கள் மீட்பு



(கொழும்பு)

புத்தளம் சாலியவெவ பிரதேசத்தில் மனித எச்சங்கள் சிலவற்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலிருந்து எம்.பி 20 ரக ரிவோல்வர் ஒன்றையும் சாலியவெவ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# அண்ணனும் தங்கையும் முகத்துவாரத்தில் மூழ்கிப்பலி

(கொழும்பு)

முகத்துவாரத்தில், குளித்துக்கொண்டிருந்த அண்ணனும் தங்கையும் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவமொன்று, வென்னப்புவ, சின்தாத்திரிய முகத்துவாரத்தில் இடம் பெற்றுள்ளது.

வென்னப்புவ சின்தாத்திரிய பிரதேசத்தைச் சேர்ந்த நிஷானி பெர்னாண்டோ (வயது 17) மற்றும் ரன்திம பெரனாண்டோ (வயது 15) ஆகிய இருவருமே கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மாஓயா ஆறு, கடலில் கலக்கும், முகத்துவாரத்திலேயே இவ்விருவரும், இன்னும் சிலரும் குளித்துக்கொண்டிருந்துள்ளனர். இதன்போதே, இருவரும் நீரில் இழுத்துச்செல்லப்பட்டு மூழ்கி, உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என, பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கிய இருவரையும், அங்கு குழுமியிருந்தவர்களும் பிரதேச வாசிகளும் காப்பாற்றுவதற்கு முயன்ற போதிலும், அந்த முயற்சி பயனளிக்கவில்லை. எனினும், அவ்விருவரும் சடலங்களாகவே மீட்கப்பட்டனர்.

அவ்விரு சடலங்களும், பிரேத பரிசோதனைக்காக, மாரவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில், தாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக, வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

# ஐ.தே.கவின் எம்.பிக்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரத் தீர்மானித்துள்ளனர்.

1965ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த டட்லி சேனநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு தொகுதி உறுப்பினர்கள் இஞ்சிக் குழு என ஓர் குழு அமைத்து எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டனர்.

இதேவிதமாக தற்போதைய அரசாங்கத்திலும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

சில மாதங்களாக இந்தக் குழுவிற்கான ஓர் தலைவரை தெரிவு செய்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவின் தலைமைப் பதவிக்கு இராஜாங்க அமைச்சர் ஒருவரின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர், ரஞ்சித் அலுவிஹாரே, அஜித் மான்னப்பெரும மற்றும் நலின்பண்டார ஆகியோரின் பெயர்களும் இந்த க்குழுவின் தலைமைப் பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழு ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக்குழு என அழைக்கப்பட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த மாற்றுக் குழுத் தொடர்பில் அந்தக் குழுவில் அங்கம் வகிப்ப தாகக் கூறப்படும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என்பதுடன், ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தப் பிளவு பற்றிய எந்தவொரு தகவலையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீதோட்டமுல்ல அனர்த்தம் குறித்து வியட்நாம் ஜனாதிபதி அனுதாபம்

(கொழும்பு)

மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பில் இலங்கை மக்கள் மற்றும் அரசாங்கத்திற்குதனது அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதாக வியட்நாம் ஜனா திபதி ஹெண்டை குவான் (Tran Dai Quang), வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் குயன் பூ ரோனங் (Nguyen Phu Trong) தெரிவித்துள்ளனர்.

வியட்நாமுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம், இந்த கவலைக்குரிய சந்தர்ப்பத்தில் வியட்நாம் மக்களும் அரசாங்கமும் இலங்கையுடன் ஒன்றிணைந்துள்ளதாக வியட்நாம் ஜனாதிபதியும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் கருத்துத் தெரிவித்தனர்.

இவ்வாறான அனர்த்தம் எதிர்காலத்தில் இடம்பெறாது இருப்பதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும்போது ஏதேனும் தேவைகள் இருப்பின் அவற்றை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இலங்கைக்கு குவைத் நாடு 16.5 மில்.டொலர் கடன் உதவி

(கொழும்பு)

இலங்கை அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு உதவும் வகையில், 16.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை (5 மில்லியன் குவைத் தினார்) மேலதிக கடனாக வழங்க குவைத் நாடு நடவடிக்கை எடுத்துள்ளது.

குவைத் நாட்டிலுள்ள அரேபிய அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திலிருந்து (KFAED) இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 150 | 60 | 100 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 | 120 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 130 | 160 | 180 | 200 | 100 |
| தக்காளி | 60 | 150 | 60 | 80 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 70 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 130 | 100 | 60 | 80 | 100 | 100 | 60 |
| கரட் | 100 | 120 | 80 | 100 | 100 | 200 | 80 |
| பூசணி | 50 | 100 | 30 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 40 | 50 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 110 | 160 | 160-180 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 100 | 140 | 100 | 120 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 80 | - | 120 | 100 |
| பயற்றங்காய் | 70 | 100 | 50 | 80 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 80 | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 100 | 150 | 40 | 120 | 100 | 160 | 80 |
| கறிமிளகாய் | 160 | 200 | 100 | 160 | 140 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 250 | 300 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 300 | 120 | 160 | 150 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 100 | 40 | 80 | - | 80 | 90 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 30 | 50 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 40 | 80 | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 100 | 70 | 70 | 65 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 150 | 300 | 150 | 200 | 180 | 200 | 200 |
| வெங்காயப்பூ | - | - | - | - | - | - | - |
| முள்ளங்கி | 80 | - | - | 60 | - | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | - | 10 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | - | 10 | 10 | 10 | 20 | 20 |
| சுரப்பனை | - | - | - | - | - | 80 | - |

# புலிகளின் ஜெயந்தன் அணியை ஏறாவூரில் தேடும் படைத்தரப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின், ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த உறுப்பினர்களை தேடும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக, பாதுகாப்புத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் படையணியிலிருந்து தப்பிச் சென்று, தென்னிந்தியாவில் தலைமறைவாகி வாழ்ந்த வர்களில் சிலர் நாட்டுக்குள் மீண்டும் வந்துள்ளதாக தகவல் கிடைத்ததையடுத்தே, இந்த தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜெயந்தன் படை யணியைச் சேர்ந்தவர்களில் சிலர், மட்டக்களப்பு, ஏறாவூர்பொலிஸ் பிரிவிலேயே, நடமாடுவதாக தகவல் கிடைத்துள்ளது என்றும் அந்தத்தரப்பு தெரிவித்துள்ளது. தங்களுடைய பொலிஸ் பிரிவில், சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் மற்றும் புதிய நபர்கள் தென்பட்டால், அவ்வாறானவர்கள் தொடர்பில், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறு, பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளாத போதும் பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்புத் தலைவர்களிடம் ஒரு வித்தியாசம் தெரிகிறது

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இரா.சம்பந்தர், மாவை.சேனாதிராசா ஆகியோரின் உரைகளிலும் நடவடிக்கைகளிலும் ஒரு மாற்றம் தெரிவதைக் காணமுடிகிறது.

புங்குடுதீவில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய மாவை.சேனாதிராசா அவர்கள் அரசாங்கம் ஏமாற்றினால் சர்வதேச சமூகத்துடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தீர்மானத்தை எடுக்கும் எனக் கூறியுள்ளார்.

அட! இது நல்ல கதையாக இருக்கிறதே! அந்தத் தீர்மானம் என்னவாகவிருக்கும் என்று அறிய மனம் அவாப்பட்ட போது,

அந்தத் தீர்மானம் என்ன என்பது எங்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும்தான் தெரியும் என்றும் மாவை.சேனாதிராசா அவர்கள் கூறியுள்ளார்.

குறித்த தீர்மானம் இலங்கை அரசுக்குத் தெரிய வந்தால் அது தீர்மானத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அவர் தீர்மானம் என்ன என்பதை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தாமல் இருந்திருக்கலாம்.

எதுவாயினும் இலங்கை அரசாங்கம் எங்களை ஏமாற்றினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச சமூகமும் ஒரு வலுவான தீர்மானத்தை வைத்துள்ளன என்பது நம்பிக்கை தருகிறது.

இலங்கை அரசாங்கம் எங்களை ஏமாற்ற நினைத்தால், ஐயா! நீங்கள் கூறிய அந்தத் தீர்மானத்தை செய்யுங்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவை தமிழ் மக்கள் கேட்கக்கூடிய ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது.

ஆனால் அந்தத் தீர்மானம் என்ன என்பது குறித்து நாம் ஆராயாமல் விட்டாலும் அப்படியொரு தீர்மானத்துடன் இருக்கக்கூடிய நம்பிக்கையைத் தந்த மாவை.சேனாதிராசாவுக்கு நாம் நன்றி கூறிக்கொள்ள வேண்டும்.

இதேபோன்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் தமிழ் மக்களின் நிலத்தை விடுவிக்கும்படி படைத்தரப்பை சந்தித்துள்ளார்.

அச்சந்திப்பில் ஜனாதிபதி உத்தரவிட்டால் தமிழ் மக்களின் நிலத்தை விடுவிப்பதில் படையினருக்கு எந்த இடைஞ்சலும் இல்லை என்று கூறியுள்ளனராம்.

அப்படியானால் தமிழ் மக்களின் நிலத்தை படையினர் விடுவிக்காமல் இருப்பதற்கு ஜனாதிபதி தான் காரணம் என்பது போல விடயம் அமைகிறது.

ஆக, படையினர் கூறியதை சம்பந்தர் ஐயா, முற்றுமுழுதாக நம்பியுள்ளார் என்றே கருத வேண்டும்.

மக்களின் நிலங்களை விடுவிக்க முடியாது என்று படை அதிகாரிகள் கூறிய செய்திகள் ஊடகங்களில் ஏற்கெனவே வெளிவந்துள்ள போதிலும் இது தொடர்பான தகவல்கள்,தரவுகள் எதுவுமின்றி படையினரைச் சந்தித்தால், அவர்கள் சொல்வதை அப்படியே ஏற்கவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை எனலாம்.

எதுவாயினும் படையினரைச் சந்தித்த சம்பந்தர் ஐயா, அடுத்து அவசர அவசரமாக ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும்.

அவரைச் சந்தித்து தமிழ் மக்களின் நிலங்களை விடுவிக்க படையினர் தயார், நீங்கள் தான் உத்தரவிடவில்லையாம் என்று கூற வேண்டும்.

அப்போது தான் ஜனாதிபதியும் படைத்தரப்பும் முறுகிக்கொள்ளும் நிலைமை வரும். இதை சம்பந்தர் ஐயா உடனடியாகச் செய்வார் என நம்பலாம்.

# ஊடகவியலாளர் லசந்த படுகொலை குறித்து
# தாஜுடீன் கொலை விவகாரம் அநுரவின் விளக்கமறியல் நீடிப்பு

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, றக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை வழக்கில் அநுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், முதலாம் சந்தேக நபரான சுமித் பெரேரா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நிமோனியா காய்ச்சலால் குழந்தை பரிதாப மரணம்

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகிழுர் கண்ணகிபுரத்தில் நிமோனியா காய்ச்சலால் ஒன்றரை மாதக் குழந்தையின் உயிர் பிரிந்துள்ளது.

கண்ணகிபுரத்தைச்சேர்ந்த முரளிதரன் சன்சுதி எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை இரண்டு வாரங்களாக தொடர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தை உயிரிழந்துள்ளது.

குறித்த பச்சிளம் குழந்தை பரிதாபமாக உயிரிழந்தமையால் மகிழுர் பிரதேசம் முழுவதும் சோகமயமாக காட்சியளித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிமோனியா காய்ச்சல் காரணமாக இதுவரைக்கும் இருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் நீராவிபுரம், செட்டியார்கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)




இறைவன் உருவமற்றவன். நல்லது கெட்டது என்னும் குணங்கள் அற்றவன். தொடக்கம் முடிவு இல்லாதவன். எங்கும் நிறைந்தவன். நம் உள்ளங்களிலும் உறைபவன். அப்படிப்பட்ட ஆண்டவனை அடி பணிந்து எப்படியும் வணங்கலாம். மானசீகமாக வணங்கலாம். மேனியில் மண்பட விழுந்து வணங்கலாம். இந்த உண்மைகளைச் சத்தியம் என உணர்ந்து இதயம் இறைவனை ஏற்றுக் கொண்டாலும் அறிவானது ஆண்டவனை அப்படியே ஒப்புக்கொள்ளத் தயங்கியது. கண்ணுக்குத் தெரியாத கடவுளை எப்படி வணங்குவது என்று கேள்வி கேட்டது.

அவனுக்குக் கை உண்டா, கால் உண்டா, கருணை பொழியும் கண் உண்டா, அன்புமொழி பேசும் பவளவாய் உண்டா என ஆயிரம் கேள்விகளை அடுத்தடுத்து வீசியது.

'ஐயகோ... இறைவனை என்னிடத்தில் உணர்கிறேன். அவனோடு கலந்து அவனாக மாறும் காலம் கனியக் காத்திருக்கிறேன். இப்போது பார்த்து என் அறிவே, ஆண்டவனையே நீ ஆராய்கிறாயே... அந்த அழிவற்ற மெய்யை, மெய் வடிவில் காட்டச் சொல்கிறாயே... நான் என்ன செய்வேன்? என்று அறிவின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் இதயம் பரிதவித்தது. (தொடரும்)

## கொழும்பு குப்பைகளுக்கு புதிய இடம்- நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

மீதோட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததை அடுத்து கொழும்பில் ஒரு நாளைக்கு சேரும் 350 மெட்ரிக்தொன் குப்பைகளை கழிவு சேகரிப்பு பகுதியில் போடுவதற்கு கொழும்பு மாநகரசபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபை நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு அமைய கஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த குப்பைகளை பெற்றுக் கொள்ளுமாறு கழிவு முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், மாதர் சங்கம் பாலர் பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் இன்று புதன் கிழமை பி.ப 4 மணிக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய முன்றலில் இ. தயாகரன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், நல்லூர் பிரதேச சபை செயலாளர் சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நமது எஜமானர் யார்?



✦ கடவுள் நமக்கு மிக அருகிலேயே இருக்கிறார். ஆனால், நம்பிக்கை இருந்தால் மட்டுமே அவரைத் தரிசிக்க முடியும்.

✦ பொன், பெண், மண் ஆகிய மூவாசைக்கு மனதில் இடம் கொடுத்தால் ஆன்மீக யோகம் ஒருபோதும் கைகூடாது.

✦ கடவுளே உலகின் ஒரே எஜமானர். நாம் அனைவரும் அவரின் பணியாளர்கள். அவருக்கு பணிவிடை செய்வது தான் பிறவிப்பயன்.

✦ ஆராய்ச்சி அறிவால் கடவுள்தரிசனத்தைப் பெற முடியாது. அசைக்க முடியாத நம்பிக்கை ஒன்றே தேவை.

✦ தீயவாசனை மனதில் இருக்கும் வரையில் தூய்மையான பக்தி உண்டாகாது. பக்தி செலுத்துவதே வாழ்வின் சாராம்சம்.

✦ உருவமற்ற கடவுளை தியானம் செய்வது மிகக் கடினமான செயல். அதற்காகவே உருவநிலையில் வழிபாடு செய்கிறோம்.

✦ கள்ளம் கபடமில்லாத மனம் படைத்தவர்கள் கடவுளின் அருளை எளிதில் பெற்று மகிழ்கிறார்கள்.

✦ பேராசை, காமம், கோபம் போன்ற துர்க்குணங்கள் கடவுளை அறிந்த பிறகே நம்மை விட்டு அகலும்.

## முன்னாள் இராணுவ உயரதிகாரிகள் மூவரிடம் நேற்று தீவிர விசாரணை

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் இராணுவ உயரதிகாரிகள் 3பேர் நேற்றுக் காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் முப்படைகளின் பிரதானி எயார் ஷீப் மார்ஷல் டொனால்ட் பெரேரா, மேஜர்ஜெனரல்மனோ பெரேரா மற்றும் மேஜர் ஜெனரல் குமார் ஹேரத் ஆகியோரை இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரும் முற்பகல் 10 மணியவில் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி கப்பூது தோட்ட வெளியில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த இயந்திரம் மாலையில் காணாமற் போயுள்ளதாக அதன் உரிமையாளர் நேற்று நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ந.சந்திரலிங்கம் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றுத் தொடர்

## அச்சுவேலி ரொக்கெட் சம்பியன்




அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பிரதேசங்களை உள்ளடக்கிய 14 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய அமரர் ந. சந்திரலிங்கம் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் அச்சுவேலி ரொக்கெட் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கி கொண்டது.


புதுவருட தினத்தன்று அச்சுவேலி ரொக்கெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அச்சுவேலி முரசொலி விளையாட்டுக் கழகத்தை எதிர் கொண்டது. அச்சுவேலி ரொக்கெட் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய முரசொலி அணி 07 இலக்குகளை இழந்து நிர்ணயிக்கப்பட்ட 15ஓவர்களில் 127 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. முரசொலி அணி சார்பில் செந்துஜன் 39 ஓட்டங்களையும், சுபதாஸ் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ரொக்கெட் அணி சார்பில் ஜெனக்சன், ஜெஹிந்தாஸ் ஆகியோர் தலா 3 இலக்குகளை கைப்பற்றினர்.

128 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி ரொக்கெட் அணி மது, நெக்ஸ்மன், ஜெனக்சன் ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டத்தின் மூலம் 14.2 ஓவர்கள் நிறைவில் 07 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களை பெற்று வெற்றியை தனதாக்கி கொண்டது. ரொக்கெட் அணி சார்பில் மது, நெக்ஸ்மன் தலா 25 ஓட்டங்களையும், ஜெனக்சன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் முரசொலி அணி சார்பாக செந்துஜன், செல்வன் ஆகியோர் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

இதன் மூலம் தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக அமரர் ந.சந்திரலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை அச்சுவேலி ரொக்கெட் விளையாட்டுக்கழகம் தனதாக்கி கொண்டது. போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ரொக்கெட் அணி வீரர் டான்ஜனும், சிறந்த பந்து வீச்சாளராக முரசொலி வீரர் செல்வனும், இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக ரொக்கெட் வீரர் ஜெனக்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III-2017

## பல்கலை. அணியின் 2 ஆவது வெற்றி



யாழ்.மாவட்டத்தில் இருந்து இரு அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டி தொடரில் யாழ். பல்கலைக்கழக அணி பற்றீசியன்ஸ் அணியை ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்று தனது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக் கழக அணி 46.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 153 ஓட்டங்களை பெற்றது. யோகேஸ்வரன்-22, தரகா-24, ருக்ஸ்மன்-36, குருகுலசூரிய- 29, ஓட்டங்களை பெற்றனர்.

ரதீஸன்-3, நோபேட், சுபநேசன், தனு தலா 2 இலக்குகளையும் , கவஸ்கர் -1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்டிபடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 49 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றது. தனு- 31, ரியூடர்-48, முரளி-37, நோபேட்-10 ஓட்டங்களை பெற்றனர். லோகதீஸ்வர்-4, ஜனன்தன்-3 , குருகுலசூரிய, துவாரகசீலன், செந்தூரன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் ஆவது ஆண்டாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த அணித் தெரிவு நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக அணி 7.54 புள்ளிகளையும், பற்றீசியன்ஸ அணி 2.52 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.(க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அல்வாய் இளைஞர் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டியில் மாலுசந்தி மைக்கல்





பிரித்தானியா, சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் அல்வாய் விளையாட்டு விழாவின் கிரிக்கெட் தொடர் கடந்த சனிக்கிழமை அன்று மாலு சந்தி மைக்கல் மைதானத்தில் காலை 8.30 மணிக்கு உதய சூரியன் விளையாட்டுக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

மூன்றாவது போட்டியில் அல்வாய் இளைஞர் அணியை எதிர்த்து மாலு சந்தி மைக்கல் ஏ அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மாலு சந்தி மைக்கல் ஏ அணி 10 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோத்ராஜ் 36, தர்சன் 20, அச்சுதன் 18, ராகவன் 9 , ரகுவரன் 7 . அல்வாய் இளைஞர் அணியின் பந்துவீச்சு சார்பில் பிரசாந் 3, வாசன் கமல் , உதயகுமார், பிரணவன் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அல்வாய் இளைஞர் அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 86 ஓட்டங்களை பெற்றது. இதில் நிபேந்தன் 19, கிரி 17, கமலச்சந்திரன், உதயகுமார் தலா 7, பிரணவன் 6, ஓட்டங்களைப் பெற்றனர். மாலுசந்தி மைக்கல் அணியின் பந்து வீச்சு சார்பில் தர்சன் 4, அச்சுதன், பிரசாந் தலா 2, தினோஜன் ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இறுதியில் அல்வாய் இளைஞர் அணியை 24 ஓட்டங்களினால் வெற்றிபெற்று மாலு சந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது. (க)

# ஞானம்ஸ் முதலாமிடம்



சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு நெல்லியடி கொற்றாவத்தையில் உள்ள இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ஞானம் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

நெல்லியடியில் உள்ள டேவீட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி இவ் விளையாட்டு விழா அப் பகுதியில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, வடமாகாணசபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் ,கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோஸ்குமார், நெல்லியடி பொலிஸார், வர்த்தகர்கள், பொது மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (க-60)



வல்வை விளையாட்டுக் கழகத்தின் 57 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்டுவந்த மாபெரும் விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் மற்றும் பரிசளிப்பு வைபவம் கடந்த சனிக்கிழமை 15 ஆம் திகதி தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. வல்வை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மு.பிரேம்குமார் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதமும் கலந்து சிறப்பித்திருந்தார்கள். அதன் சில பதிவுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகிச்சை வழங்காமை...

கிணங்க பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணையினை மேற்கொண்டார்.

அப்போதே இரவு அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிகிச்சை எதுவும் வழங்கப்படவில்லை என்ற உண்மை உறவினர்களினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாற்றுத் திறனாளியான நபரை வைத்தியசாலை தரப்பினர் நடத்தியே விடுதிக்கு அழைத்து சென்றதாகவும் உறவினர்கள் குற்றம் சாட்டினர்.

நேற்று மதியம் மரண விசாரணை அதிகாரியின் உத்தரவுககிணங்க யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையினை மேற்கொண்டார்.

இதில் குடல் அடைப்பு, சளி, கிருமித் தொற்று என்பன வயிற்றில் காணப்பட்டதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் இரவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளியான நபருக்கு வைத்தியசாலை தரப்பினர் சிகிச்சை வழங்கவில்லை என்பது தெரிவிக்கப்பட்டதன் மூலம் அங்கு இது போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் இவ் விசாரணை அறிக்கை பருத்தித்துறை நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-60)

## தமிழ்-சிங்கள...

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் சிங்கள மீனவர்களுக்கும் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் நேற்றுக் காலை முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டது.

முகத்துவாரம் பகுதியை அண்டிய கடலில் மீன்பிடிப்பதற்கான கரைவலைப்பாடு தொடர்பிலான அளவீட்டின் போதே, இந்த அமைதியின்மை ஏற்பட்டது.

கடந்தகாலங்களில் நடைபெற்ற யுத்தத்தினால் கொக்கிளாய் பகுதியில் பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்த தமிழ் மீனவர்கள் இடம்பெயர்நத நிலையில், தமிழர்களின் கரைவலைப்பாடுகளை நீர்கொழும்பு, சிலாபம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்துவந்த சிங்கள மீனவர்கள், ஆக்கிரமித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இப்பகுதியில் அடிக்கடி இருதரப்பினருக்குமிடையில் முறுகல் நிலைமை தோன்றுவது வழக்கம். மீள்குடியேற்றத்தின் பின்னர் தமக்கான கரைவலைப்பாடு உரிமையைப் பெற்றுத் தருமாறு கோரி, தமிழ் மீனவர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் மட்டத்தில் தீர்வுகள் வழங்கப்படாத நிலையில், இதுதொடர்பான விடயம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய கரைவலைப்பாட்டை அளவிடும் பணிகள் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த அளவீட்டுப் பணிகளின் போது, கரைத்துறைப்பற்று பிரதேச செயலக காணி பகுதி அதிகாரிகள், முல்லைத்தீவு நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் கொழும்பில் இருந்து வந்த நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள ஆகியோர் பங்கேற்றனர். இதன்போது, கொழும்பில் இருந்து வந்த நீரியவளத் திணைக்கள அதிகாரிகள், சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பில் உள்ள முகத்துவாரம் அமைந்துள்ள தலைப்பாடு என்ற பகுதியில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் இருந்தே அள வீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து அளவீட்டு பணிகளை மேற்கொண்டிருந்தனர். இதன் காரணமாக அளவீடு இடம்பெறும் பகுதியில் கடமைக்காக பிரசன்னமாகியிருந்த கரைதுறைப்பற்று காணிப்பகுதி அதிகாரிகள் கடற்தொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் பக்கச்சார்பான வகையில் முகத்துவாரம் அமைந்துள்ள தலைப்பாடு பகுதியை விட்டு அதிலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் அளவீட்டை ஆரம்பிக்கும் செயற்பாடானது நீதிமன்றின் உத்தரவுக்கு முரணானது என தெரிவித்து வெளிநடப்பு செய்திருந்தனர்.

இந்நிலையில், தமது வசமுள்ள தலைப்பாடு என்ற பகுதியில் இருந்து கரைவலைப்பாட்டுக்கான அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு சிங்கள மீனவர்கள் தமது எதிர்ப்பை தொடர்ந்தும் வெளியிட்டனர். எனினும், தமிழ் மீனவர்கள் தலைப்பாடு என்ற பகுதியில் இருந்தே அளவீடு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர்.

பின்னர் இரு தரப்பினரையும் கடற் றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளையும் வைத்து பொலிஸாரின் துணையுடன் அளவீட்டுப் பணிகள் இடம்பெற்றது. இருப்பினும் இந்த அளவீட்டுப் பணிகள் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என தெரிவிக்கும் மீனவர்கள் இதனை நீதிமன்றில் தெரிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-15,281,312)

## கிராம சேவகர்...

மேற்படி கிராம சேவையாளரைக் கடமை நேரத்தில் அவரைத் தாக்கியவர்கள் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட போதிலும் அவர்களை இதுவரை பொலிஸார் கைது செய்யவில்லை எனத் தெரியவருகின்றது.

கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அல்லாரையில் உள்ள வீடொன்றில் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பிய மதுபோதைக் கும்பல் ஒன்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டது. இதனால் தங்களுக்கு பெரும் இடையூறாக உள்ளது என பிரதேச மக்கள் கிராம சேவையாளருக்குத் தெரியப்படுத்தினர்.

இந்நிலையில், அந்த வீட்டுக்குச் சென்ற கிராம சேவையாளர் வீட்டு உரிமையாளரை அழைத்து பாடல் சத்தத்தை குறைக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்போது அவரும் அவரோடு சேர்ந்து மதுபோதையில் இருந்தவர்களும் கிராம சேவையாளரைக் கடுமையாகத் தாக்கினர் எனக் கூறப்படுகின்றது. இதன்போது அவரது கைத்தொலைபேசியையும் பறித்து எறிந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட கிராம சேவையாளர் அது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதும் பொலிஸார் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கிராம சேவையாளர் ஒருவரை அவரது கடமை நேரத்தில் தாக்கியவர்களை கைது செய்யாத பொலிஸாரின் செயற்பாடு அப்பகுதி மக்களிடையேயும் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடையேயும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (செ-9)

## யாழ்.கொட்டடிப்...

குறித்த சடலத்தின் வாயினால் நுரை தள்ளிய நிலையில் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவம் தொடர்பாக அப் பகுதி மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளினூடாக குறித்த உயிரிழந்த நபர் அடையாளம் காணப்பட்டிருந்தார். இதேவேளை குறித்த சம்பவமானது திட்டமிட்ட கொலை சம்பவமாகவும் இருக்கலாம் எனவும் அப் பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்தில் இருந்து சடலமானது மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைகக்கப்பட்டிருந்ததுடன் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸ் நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை. குறித்த நபர் மணமல்லாத விசத்தன்மை கொண்ட திரவம் அல்லது திண்மத்தை உட்கொண்டு உயிரிழந்துள்ளார் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத பரிசோதனையில் முதற்கட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## இயேசு கிறிஸ்துநாதரை...

நேற்றையதினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தன்னிலை விளக்க அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் முதலமைச்சர் குறிப்பிடுகையில்,

நான் தினப்புயல் என்ற பத்திரிகைக்குக் கொடுத்த செவ்வி சம்பந்தமாகச் சில தவறான கருத்துக்கள் எழுந்துள்ளன. நான் இயேசு கிறிஸ்து நாதரை அவமதிக்கும் விதத்தில் கருத்துக்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

முதலில் இணையத் தளத்தில் வந்த செய்தியை யாரும் பார்த்தார்களானால் அதில் வரும் கடைசி சட்டம் (frame) மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும். செவ்வி எடுத்தவர் முதல் சட்டங்களில் பேசியவாறு கடைசி சட்டத்தில் பேசவில்லை. அவர் தெளிவாகப் பேச முடியாதவர். மிகவும் பதிவான குரலில் தான் முன்னைய சட்டங்களில் கேள்விகேட்டு வந்தார். என்னிடம் கடைசி சட்டத்தின் நிகழ்வின் போதும் அவ்வாறே பேசினார். ஆனால் வெளிவந்த இணையத்தளச் சட்டத்தில் அவர் மிகத் தெளிவாகப் பேசியுள்ளார். என் முன்னிலையில் அவர் அவ்வாறு பேசவில்லை. அத்துடன் அவர் கேட்டதாக ஒளிபரப்பாகியிருக்கும் கேள்விக்கு நான் தந்ததாக பதிவு செய்யப்பட்டிருக்கும் என் பதில்கள் வேண்டுமென்றே ஒலியைக் குறைய வைத்து நேயர்களுக்குக் கேட்காதவகையில் தரப்பட்டிருக்கின்றன. அவரின் கேள்விமட்டும் மிகத் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. சிறுபிள்ளைத்தனம் என்று அவர் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை. எது எவ்வாறு இருப்பினும் நடந்தது இதுதான்.

செவ்வி எடுத்தவர், குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரை நீங்கள் எப்படி உங்கள குருவாக ஏற்கலாம். நீங்கள் ஒரு நீதியரசர் தற்போது முதலமைச்சர். இது தவறான தல்லவா என்று கேட்டார். அதற்கு நான் குற்றவாளி எனக் காணப்பட்டு சிலுவையில் அறைந்த ஒருவரை 2000 வருடமாக மக்கள் தெய்வமாகக் கொண்டாடுகின்றார்கள் அல்லவா என்றேன்.

அதைத்தான் இயேசுவையும் பிரேமானந்த சுவாமியையும் முதலமைச்சர் ஒப்பிட்டு விட்டார் என்று சிலர் கூறி எனக் கெதிராக கிறிஸ்தவ சகோதரர்களை ஏற்றிவிட எத்தனித்துள்ளார்கள்.

இயேசுகிறிஸ்து நாதரின் பரம அபிமானி காலஞ்சென்ற பிரேமானந்த சுவாமி. பல பேச்சுக்களில் இயேசுநாதரின் வாழ்க்கையில் இருந்து மேற்கோள்களை எடுத்துரைப்பார். அன்னை வேளாங்கண்ணியைப் போய் தரிசித்து வாருங்கள் என்று எனக்கும் என் குடும்பத்தாருக்கும் அறிவுரை வழங்கியவரே அவர்தான். இன்று பல்லாயிரக்கணக்கான மேலை நாட்டுகிறிஸ்தவ அன்பர்கள் அவரின் அபிமானிகளாக உள்ளார்கள்.

அதுபோக 1958-ம் ஆண்டிலேயே நான் றோயல் கல்லூரியில் சமய ஒப்பீட்டு பரிசு (Comparative Religion) பெற்றவன். பைபிளில் இருந்து Gospel according to St.Mathew என்பதே கிறிஸ்தவம் சம்பந்த மானபாடம். இதேபோல் இஸ்லாம், பௌத்தம் இந்துமதம் போன்ற எல்லா மதங்களிலிருந்தும் பாடவிதானம் தரப்பட்டு அவற்றில் முதல் இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையிலேயே பரிசுபெற்றவன். அன்று தொடக்கம் இன்று வரைஎல்லாமதங்களையும் அனுசரித்துப் போற்றிவருபவன். கிறிஸ்தவ நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்டவன். இயேசு கிறிஸ்துவை இறை தூதனாக ஏற்றுப் பணிந்து வருபவன். வருடாவருடம் St.Antony Feast காலத்தில் சென்று வணங்கிவருபவன். நான் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும் சுவாமி பிரேமாநந்தரின் வாழ்க்கையும் எந்தவிதத்திலும் ஒப்பிட்டுபேசவில்லை. குற்றவாளியொருவரை எவ்வாறு குருவாக ஏற்கலாம் என்பதற்கு யேசுகிறிஸ்துவை உதாரணமாகக் கூறினேன். இயேசுநாதரின் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் வேறு, சுவாமியின் மீது சுமத்தப்பட்டகுற்றங்கள் வேறு, எவ்வாறு அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்று பலதைப்பற்றியும் பலர் எழுதியுள்ளார்கள். இருவரையும் ஒப்பிடமுனைந்தவர்கள் அவர்களே. நான் என்னிடம் கேட்டகேள்விக்கு ஒரு முன்னுதாரணம் கூறினேன் அவ்வளவுதான். அது கிறிஸ்தவ மக்களின் மனங்களை உண்மையில் புண்படுத்திவிட்டதென்றால் அதற்காக நான் மனவருத்தம் அடைகின்றேன். ஆனால் மனவருத்தம் அடையவேண்டியவிதத்தில் எதுவும் சொல்லப்படவில்லை என்பதே என் வாதம். இதில் அரசியல் கலந்திருப்பதாகவே நான் உணர்கின்றேன் என முதலமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஆட்டோ தீக்கிரை...

வண்டி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியைச் சேர்ந்த குகன் என்பவரது முச்சக்கர வண்டியே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது.

நேற்றிரவு 6.50 மணியளவில் குறித்த நபரின் வீட்டிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே முச்சக்கர வண்டி இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## ஃகைக்குண்டுடன்...

பொலிஸார் ஃகைது செய்துள்ளனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் ரோந்து சென்ற பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவரை சோதனை செய்த போதே மேற்படி இளைஞரிடம் இருந்து உள்நாட்டு தயாரிப்பு கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## மருதங்கேணி திட்ட...

நாயகன் தலைமையில் நேற்றைய தினம் யாழ்.மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சமாசத்தினருடன் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சுமந்திரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருதங்கேணி பிரதேசத்தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் மேற்கொள்வது தொடர்பில் சில வருடங்களாக முன்மொழிவு இருந்து வந்தது. அத்திட்டத்தை அமுல்படுத்தினால் அப்பகுதியில் உள்ள விசேட மீன்பிடி முறைகளில் பாதிப்பு ஏற்படும் என ஆரம்பத்தில் இருந்து எதிர்ப்புக்கள் இருந்து வந்தது.

ஆனால் விஞ்ஞான ரீதியில் விளக்கம் கொடுப்பதாக அதிகாரிகள் உத்தரவாதம் அளித்து ஆராய்ச்சி செய்து அதன் பெறுபேறுகள் அடிப்படையில் தீர்மானம் எடுப்பதற்கு தயார் என எதிர்ப்பு தெரிவித்த பகுதியினர் தெரிவித்திருந்தனர்.

நீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆராய்ச்சி செய்யும் போது ஏனைய பகுதியினருக்கும் பாதிப்பு இல்லாமல் இருந்தால்தான் அத் திட்டத்தை செய்ய அனுமதி கொடுப்பதாக முடிவெடுத்திருந்தோம்.

ஆனால் வடமராட்சி கிழக்கு மீன்பிடி விசேட முறைகள் பாதிக்கப்படும் என்ற சந்தேகம் மேற்குறித்த ஆராய்ச்சியின் பெறுபேறுகளில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மீன்பிடி தொழிலை இத்திட்டம் பாதிக்கும் என்ற தீர்மானத்துக்கு வரக்கூடியதாக உள்ளது. இச் செயற்பாடு நிச்சயமாக கடற்தொழிலாளரின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என திடமாக எமக்கு தெரியவருகிறது.

நாம் கேட்டுக்கொண்டதன் படி நன்னீரை பெறுவதற்கு வேறு ஒரு இடத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்ச்சி செய்யவில்லை. எனவே மருதங்கேணி பிரதேசத்தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை முற்று முழுதாக கைவிடுமாறு அரச அதிபருக்கு நாம் அறிவித்துள்ளோம்.

ஆறுமுகம் திட்டம் அமுல்படுத்துவதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் எமக்கு இல்லை. அதை செயற்படுத்த கோரியுள்ளோம அத்திட்டத்தில் வரும் நீரை குடிநீருக்காக பயனபடுத்த முடியாது. குடாநாட்டு குடிநீர் பிரச்சினையை அதனால் தீர்க்க முடியாது.

எனவே மாற்று வழிகளை ஆராயச் சொல்லியுள்ளோம். மருதங்கேணி நன்னீராக்கும் திட்டத்தை இடைக்கால தீர்வாக செய்தால் கூட அது அவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்கும்.

எனவே கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை விரைவாக செயற்படுத்த வேறு நீர் மூலத்தை கண்டு பிடிக்க வேண்டும்.

இன்றைய (நேற்று) எமது கலந்துரையாடலில் பிரச்சினைக்கான தீர்வு கண்டு பிடிக்கவில்லை, ஆனால் பிரச்சினை இன்னும் அதிகமாகியுள்ளது. மேற்குறித்த திட்டத்தை எடுத்த எடுப்பில் வேண்டாம் என்று சொன்ன மக்களை நாம் அமைதிப்படுத்தி பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய இணங்கவைத்தோம். பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்த போது அனுமதி கொடுக்க முடியாது. தற்போது கொடுக்கப்பட்ட ஆராய்ச்சி தரவின் அடிப்படையில் இந்த இடத்தில் நடைமுறைப்பத்த முடியாது என்ற முடிவுக்கு நாம் வந்துள்ளோம் என சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

இரணைமடு குளத்தில் இருந்து நன்னீர் பெறும் திட்டத்தில் தாமதம் மற்றும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டதன் காரணமாக மருதங்கேணி கடலில் இருந்து நன்னீரை பெறும் திட்டத்தை மேற்கொள்வதற்கு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் முன்மொழிந்திருந்தனர்.

அதன் அடிப்படையில் குறித்த திட்டத்தினை மேற்கொள்வதற்கு பௌதிகவியல் சார் காரணிகளை ஆராய்வதற்கு அமெரிக்காவில் இருந்து நிபுணர் குழுவினரை வரவழைத்து ஒரு மாத காலமாக ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் குறித்த பகுதியில் மேற்குறித்த திட்டத்தினை ஆரம்பிக்க முடியும் என்றும் யாழ்.குடாநாட்டுக்கு இலகுவான முறையிலும் விரைவாகவும் குடிநீரை வழங்க முடியும் என்ற அறிக்கை முடிவின் பிரகாரம் மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இத்திட்டத்துக்கு பொதுமக்கள் தரப்பில் ஆதரவினை வழங்கியிருந்த போதும ஒரு சிலர் ஆரம்ப காலத்தில் இருந்து எதிர்ப்பினை தெரிவித்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகம் திட்டம்...

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்றைய தினம் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலை மையில் கைதடியில் அமைந்துள்ள முதல மைச்சர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் வடக்கில் எதிர்காலத் தில் மேற்கொள்ளவுள்ள பல திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதனை நடை முறைப்படுத்துவதற்கான ஒப்புதல் மற்றும் அது தொடர்பான நடைமுறைப் பிரச் சினை களுடன் அதற்கான நிதியீட்டல்கள் தொடர் பில் ஆராயப்பட்டன.

வடக்கின் நீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பல பாரிய திட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக ஆறுமுகம திட்டம், மருதங்கேணியில் உவர் நீரை நன்னீராக்கும் திட்டம் இரணைமடு திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டன.

இரணைமடு திட்டத்துக்கு மாற்று திட்ட மாக மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட ஆறுமுகம் திட்டத்திற்கு வடக்கு மாகாண அரசிடம் மத்திய அரசு ஒப்புதல் கேட்டிருந் தது. இதுவரை அந்த திட்டத்திற்கு வடக்கு மாகாண சபை ஒப்புதல் வழங்காத நிலை யில் நேற்றைய தினம் குறித்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த திட்டம் தொடர்பிலான சாத்தியக் கூறுகளை ஆராயும் பொருட்டு மத்திய அரசுக்கு கடிதம் மூலம் அறிவிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் மருதங்கேணியில் உவர் நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பில் சாதக பாதக நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் குறித்த திட்டம் தொடர்பில் கவனம் செலுத்துவது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நிகழ்வு ஒன்று நடைபெற்றமையால் அந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக குறித்த கூட்டம் ஒரு மணித்தியாலத்தில் நிறுத்தப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதம செய லாளர், பேராசிரியர்கள், வைத்திய துறை சார்ந்தோர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெற வுள்ள கூட்டத்தில் வட மாகாணத்திற்கு கிடைக்கவுள்ள ஆயிரம் மில்லியன் ரூபாவிற் கான வர்த்தக சொப்பிங் சென்றர் அமைத் தல், ஐம்பது மில்லியன் ரூபாய் செலவில் இரணைமடுக் குளக்கட்டில் அமைக்க எண்ணியுள்ள பூங்கா அனுமதி போன்ற விடயங்களும் ஆராயப்படவுள்ளது.

இவ்வாறு ஆராயப்பட்டு அனுமதிக்கப் படும் பட்சத்தில் குறித்த திட்டங்கள் விரை வில் நடைமுறைப்படுத்தப்பட்டு நன்மை ஈட் டும் நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (செ-4)


**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress
(சி-8140)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

தொலைபேசியில் இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்





## விஜய் மல்லையா...

திரும்ப செலுததாமல், லண்டனில் பதுங்கி யிருந்த விஜய் மல்லையாவை ஸ்கொர்ட் லாந்து பொலிஸார் நேற்று கைது செய்துள் ளனர்.

விஜய் மல்லையா, இந்தியாவில் உள்ள பல்வேறு வங்கிகளில் 9 ஆயிரம் கோடி (இந்திய மதிப்பில்) கடன் பெற்றார். ஆனால் அதை திருப்பிச் செலுத்தவில்லை.

எனவே, அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. ஆனால், கைது நடவடிக்கைகளில் இருந்து தப்பு வதற்காக அவர் லண்டன் தப்பிச் சென்றார்.

எனவே, அவரை கைது செய்து இந்தியா வுக்கு கொண்டு வர மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தது. இது தொடர்பாக ஸ்கொர்ட்லாந்து யார்ட் பொலிஸா ரின் உதவியையும் நாடியது.

இதையடுத்து தற்போது அவர் கைது செய் யப்பட்டுள்ளார். (செ-11)


**PERSONAL, GROUP CLASS**
இரசாயனவியல் (A/L) 2017, 2018, 2019, Repeat Batch 37 வருட Past Papers கற்பிக்கப்படும் சி.அங்கதன் B.Sc (Chem.Spl) (8761)
தொடர்பு : 0779208945

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
(C-8123)
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**காணி விற்பனைக்கு**
முள்ளியவளை குஞ்சுக்குளத்துக்கு அருகாமையில் 4 ஏக்கர் வயலும் அதற்கு அருகாமையில் 10 ஏக்கர் காணியும் விற்பனைக்கு உண்டு.
இக்காணியில் தென்னைகள், பனைகள், மாமரங்கள் உள்ளன. காணிகளுக்கு இரு பக்கமும் பாதைகள் உள்ளன. (C-8134)
தொடர்புக்கு
075 602 5389


**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**
பதிவு இல:649
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021-2223814

**விசேட பொதுச் சபைக் கூட்டம்**

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் இன்று (2017.04.19) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு.இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**முக்கிய குறிப்பு:** குறித்த நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்றவாறு அனைவரும் வருகை தரவும்.

செயற்குழு சார்பில்
**கா.பாஸ்கரன்**
செயலாளர்
(சி-8142)

## 26,000 பேர்...

26 ஆயிரம் சிறுநீரக நோயாளர்கள் பதிவாகி யுள்ளனர்.

அநுராதபுரம், குருநாகல், வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை உள்ளிட்ட 11 மாவட்டங்களில் அதிகளவிலான் சிறுநீரக நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சிறுநீர் நோய்த் தடுப்பிற்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்தது. (செ-11)

## தினகரனை...

யிலும் எள்ளளவும் இருக்கக் கூடாது என்று அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள முதல்வர் பழனிசாமி இல்லத்தில் மூத்த அமைச்சர்களுடன் நேற்று செவ் வாய்க்கிழமை ஆலோசனை நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்குப் பிறகு அமைச் சர் ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

"ஆட்சியை தொடர்ந்து சிறப்பாக நடத்து வது குறித்து ஆலோசித்தோம், தின கரனையும் அவர் சார்ந்த குடும்பத்தையும் முழுமையாக ஒதுக்கிவைக்கிறோம். தின கரன் குடும்பத்தின் தலையீடு கட்சியிலும், ஆட்சியிலும் எள்ளளவும் இருக்கக் கூடாது.

ஓ.பன்னீர்செல்வம் பேச்சுவார்த்தைக்கு வந்தால் அவருடன்ஆட்சி அதிகாரம் குறித்து பேச்சு நடத்தப்படும் என அவர்தெரிவித்தார் (செ-11)

## மீன்பிடிக்கச் சென்ற...

(வயது 57) என்பவரே மேற்படி உயிரிழந்த வராவார்.

நேற்றைய தினம் அதிகாலை பாசையூர் கடலில் மீன்பிடிப்பதற்காக குறித்த நபர் ஒரு வள்ளத்தில் தனியாக சென்றுள்ளார்.

கடற்கரையில் இருந்து 6 கிலோமீற்றர் தூரம் சென்ற பின்னர் இவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. அப்போது தனது கையை அசைத்து அருகில் உள்ள மீனவர்களை உதவிக்கு அழைத்துள்ளார்.

அவர்கள் அருகில் வந்து பார்த்த போது தனக்கு நெஞ்சு வலிக்கிறது என தெரிவித்து அவர்களின் படகில் ஏறியுள்ளார். படகில் ஏறும் போதே அவர் மயக்கமடைந்துள்ளார்.

உடனடியாக அவரை யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வந்த போது அவரை பரிசோதித்த வைத்தியர் குறித்த நபர் இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்திய சாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9,30)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org